# உண்மையான இஸ்லாமியக் கொள்கைகளை விட்டும் முஸ்லிம்களை வழிகெடுப்பதற்காக மறைக்கப்படுகின்ற நபிமொழிகளும், வழிகேடர்களின் அடையாளங்களும்.

***ஆக்கம்:*** உஸ்தாத் மௌலவி M.M. அஸ்மிகான் (முஅய்யிதி), இலங்கை

வெளியீடு: பாஸிய்யா கல்வி நிலையம்,

5 எகொடவத்த, சீனன் கோட்டை, பேருவலை, இலங்கை. தொலைபேசி: 0094 34 7900067.

ஒற்றுமையை வலியுறுத்தும் இஸ்லாம், ஒற்றுமை, கட்டுக்கோப்பு சீர்குலையும் போது முஸ்லிம்களின் பலம் குறைந்து விடும் என பல இடங்களில் அல்குர்ஆன், அல்ஹதீஸ் மூலம் சொல்லிக் காட்டுகிறது.

'இன்னும் நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் (தீனாகிய) கையிற்றை கெட்டியாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள். உங்கள் மீது அல்லாஹ் வழங்கிய அருட் கொடையை நினைத்துப் பாருங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருந்தபோது உங்கள் இதயங்களிடையே (இஸ்லாத்தைக் கொண்டு) அன்புப் பிணைப்பை ஏற்படுத்தினான். அவனுடைய அருளைக் கொண்டு நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள். (இதற்கு முன் நரக) நெருப்புக் கிடங்கின் விளிம்பின் மீது நீங்கள் இருந்தீர்கள். அதை விட்டும் அவன் உங்களை காப்பாற்றினான். இவ்வாறே நீங்கள் நேர்வழி பெறுவதற்காக அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு விளக்குகிறனர்.' – ஆல இம்ரான் (3: 103)

'இன்னும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் கீழ்ப்படியுங்கள். (உங்களுக்கிடையே) நீங்கள் பிணங்கி (த் தர்கித்து)க் கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் கோழைகளாகி விடுவீர்கள். உங்களுடைய ஆற்றல் போய் விடும். நீங்கள் பொறுமையாகவும் இருங்கள் நிச்சயமாக அல்லாஹ் பெறுமையாளர்களுடன் இருக்கிறான்.' –அன்பால் (8:46)

'இம் மார்க்கத்தை நீங்கள் நிலைநிறுத்துங்கள். இதில் நீங்கள் பிரிந்து விட வேண்டாம்.' – அஷ்ஷூரா (42:13) முஸ்லிம்கள் பல பிரிவுகளாக பிரிவதை வன்மையாக கண்டிக்கும் இஸ்லாம் அவ்வாறு பிரிவுகள் ஏற்பட்டு விட்டால் என்ன செய்ய வேண்டும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அல்குர்ஆனும் அல் ஹதீதும் தெளிவுப்படுத்திக் காட்டுகின்றன.

'நிச்சயமாக இதுவே நேரான என்னுடைய வழியாகும். எனவே இதனையே நீங்கள் பின்பற்றுங்கள். (இதற்கு மாறுபட்ட வேறு) வழிகளைப் பின்பற்றாதீர்கள். (வேறு வழிகளைப் பின்பற்றினீர்களேயானால்) அவனுடைய வழியை விட்டும் உங்களை அது பிரித்துவிடும். இது நீங்கள் (அல்லாஹ்வுக்கு) அஞ்சியவர்களாக நடந்து கொள்ளும் பொருட்டு அல்லாஹ் உங்களுக்கு இவற்றை வஸியத்துச் செய்(து ஏவு)கிறான்.' – அன்ஆம் (6:154)

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு கோட்டை கீறி விட்டு இதுதான் நேரான பாதை எனக் கூறினார்கள். பின்னர் அக்கோட்டின் வலது பக்கமாகவும்

இடது பக்கமாகவும் சில கோடுகளை கீறிவிட்டு இவ்வொவ்வொரு பாதைகளிலும் ஷைத்தான் இருந்துஅழைத்துக் கொண்டிருக்கிறான் எனக் கூறி விட்டு மேலே சொல்லப்பட்ட அன்ஆம் (6:154) வசனத்தை ஓதிக் காட்டினார்கள். -இப்னு மாஜா 1ஃ105 (ஹாகிம் 2ஃ318)

இத்திருவசனத்திலிருந்து பின்வரும் விசயங்களை விளங்கிக் கொள்ளலாம்.

1. நேரான பாதையையே பின்பற்ற வேண்டும்.

2. பிரிந்து சென்றவர்களின் பாதைகளைப் பின்பற்றக் கூடாது.

3. அவ்வாறு பிரிந்து சென்ற பாதைகளைப் பின்பற்றினால் அவர்களுக்கும் நேரான பாதைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

4. மார்க்கத்தில் பிரிவுகள் ஏற்படுவது நிச்சயமென்பதாலே இவ்வாறு உபதேசம் கூறப்பட்டுள்ளது.

**வழிகேடர்களின் அடையாளங்கள்...**

**பல பிரிவுகளாக பிரிவார்கள்.!**

ஹுதைபா பின் யமானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

மக்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நன்மையைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தீமையைப் பற்றிக் கேட்டேன். அது என்னைத் தீண்டி விடுமோ என்று அஞ்சிய காரணத்தால் தான் (அதைப் பற்றிக் கேட்டேன்) நான் 'அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அறியாமைக் கால மாச்சரியத்திலும் தீமையிலும் மூழ்கிக் கிடந்தோம். அப்போது அல்லாஹ் (இஸ்லாம் என்னும்) நன்மையை எங்களிடம் கொண்டு வந்தான். இந்த நன்மைக்குப் பிறகு ஒரு தீமை (குழப்பம்) இருக்கின்றதா?' என்று கேட்டேன். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'ஆம்! (இருக்கிறது)' என்று பதிலளித்தார்கள். நான் 'இந்தத் தீமைக்குப் பிறகு நன்மை ஏதும் இருக்கிறதா?' என்று கேட்டேன். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'ஆம் ஆனால் அதில் சற்று கலங்கலான நிலை குழப்பம் இருக்கும் என்று பதிலளிக்க நான், அந்தக் கலங்கலான நிலை என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ஒரு சமுதாயத்தார் எனது நேர்வழியில்லாத ஒன்றைக் கொண்டு பிறருக்கு வழி காட்டுவார்கள். அவர்களில் நன்மையையும் நீ காண்பாய், தீமையையும் காண்பாய் என்று பதிலளித்தார்கள். நான் அந்த நன்மைக்குப் பிறகு, ஒரு தீமை உண்டா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம் நரகத்தின் வாசல்களுக்கு (வருமாறு) அழைப்பவர்கள் சிலர் தோன்றுவார்கள். அவர்களுடைய அழைப்பை ஏற்பவனை நரகத்தில் அவர்கள் எறிந்து விடுவார்கள்' என்று பதிலளித்தார்கள். நான், 'அல்லாஹ்வின் தூதரே! அவர்க(ளுடைய அடையாளங்க)ளை எங்களுக்குத் தெரிவியுங்கள்' என்று கேட்க, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'அவர்கள் நம் இனத்தைச் சார்ந்தவர்களாகவே இருப்பார்கள், நம் மொழிகளாலேயே பேசுவார்கள்' என்று பதிலளித்தார்கள்.

நான் 'நான் இந்த (மனிதர்களைச் சந்திக்கும்) நிலையை அடைந்தால் என்ன (செய்ய வேண்டுமென்று) எனக்கு கட்டளையிடுங்கள்' என்று கேட்டேன்.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நீ முஸ்லிம்களின் ஜமாஅத்தை (கூட்டமைப்பபை)யும் அவர்களுடைய தலைவரையும் (இறுகப்) பற்றிக் கொள் என்று பதில் சொன்னார்கள். அதற்கு நான், அவர்களுக்கு ஒரு கூட்டமைப்போ ஒரு தலைவரோ இல்லை (பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கிறார்கள்) என்றால், (என்ன செய்வது?) என்று கேட்க, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அந்தப் பிரிவுகள் அனைத்தையும் விட்டு (விலகி) ஒதுங்கி விடு. ஒரு மரத்தின் வேர் பாகத்தைப் பற்களால் நீ கவ்விப் பிடித்திருக்க நேர்ந்து, அதே நிலையில் மரணம் உன்னைத் தழுவிக் கொண்டாலும் சரி. (எந்தப் பிரிவினரோடும் சேராமல் இரு) என்று பதிலளித்தார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 3606, ஸஹீஹுல் முஸ்லிம் 3764-5

பனீ இஸ்ரவேலர்கள் 72 கூட்டங்களாக பிரிந்து சென்றார்கள் எனது உம்மத்து 73 கூட்டங்களாக பிரிந்து செல்வார்கள். ஒரு கூட்டத்தை தவிர அனைவரும் நரகம் செல்வார்கள். அந்த கூட்டம் யார்? என ஸஹாபாக்கள் வினவிய போது நானும் எனது ஸஹாபாக்களும் எந்த அடிப்படைக் கொள்கையில் இருக்கிறோமோ அந்தக் கூட்டம் என ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் அளித்தார்கள். -ஸுனனுத் திர்மிதி -2643

அபூ சயீத் குத்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:- அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வார்க்கப்படாத சிறிய தங்கக் கட்டி ஒன்றை யமன் நாட்டிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்கள் நால்வரிடையே பங்கிட்டார்கள். இதைக் கண்ட குறைஷியரும் அன்ஸாரிகளும் கோபமடைந்து, 'நஜ்துவாசிகளின் தலைவர்களுக்கு இதைக் கொடுக்கிறார்கள். நம்மை விட்டு விடுகின்றார்களே' என்று கூறினார்கள்.

(இதையறிந்த) நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் '(புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய) அவர்களை ஈர்ப்பதற்காகவே இவ்வாறு கொடுத்தேன்' என்று சொன்னார்கள். அப்போது கண்கள் பஞ்சடைந்த, நெற்றி புடைத்த, அடர்த்தியான தாடி கொண்ட, கன்னங்கள் உப்பிய, தலை முடி மழிக்கப்பட்டிருந்த ஒரு மனிதர் முன்வந்து, 'முஹம்மதே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்' என்று சொன்னான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நான் அல்லாஹ்வுக்கு மாறுசெய்தால் வேறு யார் அவனுக்கு கீழ்ப்படியப் போகிறார்கள்? பூமியிலிருப்பவர்களில் என்னை அவன் நம்பிக்கைக்குரியவனாக ஆக்கியுள்ளான். (நான் வானிலிருப்பவர்களின் நம்பிக்கைக்கும் உரியவன்) ஆனால், நீங்கள் என்னை நம்ப மறுக்கின்றீர்களே!' என்று கேட்டார்கள். அப்போது மக்களில் ஒருவர் அவனைக் கொன்று விட அனுமதி கேட்டார். அவர் காலித் பின் வலீத் ரலியல்லாஹு அன்ஹு என்றே நான் கருதுகிறேன். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரைத் தடுத்து

விட்டார்கள். அந்த மனிதன் திரும்பிச் சென்றபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

இந்த மனிதன் பரம்பரையிலிருந்து ஒரு சமுதாயத்தார் தோன்றுவார். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது அவர்களுடைய தொண்டைக்குழியைத் தாண்டி (இதயத்திற்குள்) செல்லாது. வேட்டையாடப்பட்ட பிராணியின் உடலிலிருந்து (அதன் மீது எய்யப்பட்ட) அம்பு வெளியேறிவிடுவதைப் போன்று அவர்கள் இஸ்லாத்திலிருந்து வெளியேறி விடுவார்கள். இஸ்லாமியர்களையே அவர்கள் கொலை செய்வார்கள். சிலை வணங்கிகளை விட்டு விடுவார்கள். நான் அவர்க(ள் வாழும் நாட்க)ளை அடைந்தால் ஆது கூட்டத்தார் அழிக்கப்பட்டதைப் போன்று அவர்களை நிச்சயம் அழிப்பேன்' என்று சொன்னார்கள். -ஸஹீஹுல் புஹாரி. 7432

எனவே மேலே கூறப்பட்ட திருக்குர்ஆன் வசனங்களும் ஹதீதுகளும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்தில் பிரிவுகள், பிளவுகள் ஏற்படும் என்பதை தெளிவுபடுத்துவதோடு நேரான பாதைக்குரிய அடையாளங்களையும் வழிகெட்ட கூட்டங்களுடைய அடையாளங்களையும் கூறிக் காட்டுகிறது.

இன்று எமது சமூகத்திலும் வஹ்ஹாபிகள், காதியானிகள், ஷியாக்கள் போன்ற இன்னும் பல கூட்டங்கள் தோன்றி ஒவ்வொரு கூட்டத்தாரும் தாமே நேரான 'பாதையிலிருப்பதாகவும், சுவனம் செல்வது நமது கூட்டமே எனவும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதால் பொதுமக்கள் என்ன செய்வதென்றியாது தடுமாறுகிறார்கள். சிலர் அவர்களின் வெளிரங்க செயற்பாடுகளை அவதானித்து விட்டு அவர்களுடன் சேர்ந்து விடுகிறார்கள். அவர்களின் கொள்கையையோ, கோட்பாட்டையோ தெரிந்து கொள்ளாமல் நன்மையின் பக்கம் தானே அழைக்கிறார்கள் என அவர்களுடன் சேர்ந்து ஈமானை பறி கொடுத்து விடுகிறார்கள். அதிகமாக தொழுது நோன்பு பிடித்து, குர்ஆனை ஓதி வழிதவறி நடப்பவர்கள் பிற்காலத்தில் வருவார்கள் என்பதை ஸஹீஹுல் புஹாரியில் இடம் பெற்றுள்ள பின்வரும் ஹதீஸ் தெளிவு படுத்துகிறது.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: 'உங்களிடையே ஒரு கூட்டத்தினர் கிளம்புவார்கள். அவர்களது தொழுகையுடன் உங்களுடைய தொழுகையையும்,அவர்களது நோன்புடன் உங்களது நோன்பையும் ஒப்பிட்டுப் பார்த்து உங்களுடைய தொழுகை, நோன்பு மற்றும் நற்செயல்களை அற்பமானவையாகக் கருதுவீர்கள். (அந்த அளவிற்கு அவர்களது செயல்பாடுகள் உன்னதமானவை போன்று தென்படும்) மேலும், அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது அவர்களின் தொண்டைக் குழியைத் தாண்டிச் செல்லாது. வேட்டைப் பிராணியை விட்டு (அதன் உடலைத் துளைக்கின்ற) அம்பு (உடலின் மறுபுறம்) வெளிப்பட்டு சென்று விடுவதைப்போல மார்க்கத்திலிருந்து அவர்கள் வெளியேறி விடுவார்கள். - ஸஹீஹுல் புஹாரி. 5058.

ஏற்கனவே நாம் குறிப்பிட்ட வழிகெட்ட கூட்டத்தார்கள், பெரிய மார்க்கத் துரோகச் செயலில் ஈடுபட்டு தமது கொள்கைகளை சரியானதுபோல் மக்களுக்கு சமர்ப்பிக்கிறார்கள். தமது

கொள்கைகளுக்கு மாற்றமான ஆதாரங்களை, வரலாறுகளை மூடி மறைத்து, தமக்கு சார்பாக திரித்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குர்ஆன் வசனத்தை, ஹதீதை அரபியில் வாசித்து தனது கொள்கைக்கு சார்பாக பொய்யான பொருளை, (விளக்கத்தை) கூறி பொதுமக்களை தம்பால் இழுத்துக் கொள்கிறார்கள்.

நேரான பாதையையும் வழிகெட்ட கூட்;டங்களின் அடையாளங்களையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லிவிட்டே சென்றிருக்கிறார்கள். இவ்வடையாளங்களை நாம் சீர் தூக்கிப் பார்ப்போமேயானால், நேரான பாதையை எம்மால் கண்டு கொள்ள முடியும். நாம் ஏற்கனவே குறிப்பிட்ட ஹுதைபா இப்னு யமானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீதில் முக்கியமான இரு அடையாளங்களை சொல்லிக் காட்டுகிறார்கள்.

நான், 'அந்த நன்மைக்குப் பிறகு தீமையுண்டா' எனக் கேட்டபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நரகத்தின் வாசல்களுக்கு (வருமாறு) அழைப்பவர்கள் சிலர் தோன்றுவார்கள். அவர்களுடைய அழைப்பை ஏற்பவர்களை நரகத்தில் அவர்கள் எறிந்து விடுவார்கள்' என பதிலளித்ததும் நான், அல்லாஹ்வின் தூதரே, அவர்க(ளுடைய அடையாளங்க)ளை எனக்குத் தெரிவியுங்கள் எனக் கேட்க பின்வரும் இரு விசயங்களை கூறிக் காட்டினார்கள்.

**தம் இனத்தைச் சார்ந்தவர்கள் நம் மொழிகளிலே பேசுபவர்கள்**

(இக் கூற்றின் மூலம் நரகத்தின் பால் அழைக்கக் கூடியவர்கள் முஸ்லீம்களே என்பது தெளிவாகிறது. ஏனெனில் மற்றுமொரு அறிவிப்பில் அவர்கள் மனித உருவத்தில் இருந்தாலும் அவர்களது உள்ளங்கள் ஷைத்தானுடைய உள்ளத்திற்கு ஒப்பானதாகும் என கூறப்பட்டுள்ளது.

(நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவர்கள் அரபு மொழியில் குர்ஆன், ஹதீதை ஓதிக் காண்பித்து மக்களை வழிகெடுப்பவர்களாகும்.) இதையே ஸஹீஹுல் புகாரியில் இடம்பெறும், இறுதிகாலத்தில் வரும் கூட்டத்தாரின் அடையாளங்களை சொல்லும் போது, பூமியிலே மிகச் சிறந்த சொல்லை (திருக்குர்ஆன் வசனங்களை) எடுத்துச் சொல்வார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

-ஸஹீஹுல் புகாரி 5057, 3611.

பிரிவுகள் உண்டாகும் சந்தர்ப்பத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை ஹுதைபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள் என்பதை முன்னர் கூறப்பட்ட ஹதீதில் நாம் பார்த்தோம்.

நான் இந்த (மனிதர்களைச் சந்திக்கும்) நிலையை அடைந்தால் என்ன (செய்ய வேண்டுமென்று) எனக்கு கட்டளையிடுகிறீர்கள் எனக்கேட்டதும் அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீர் ஜமாஅத்தை (கூட்டமைப்பை)யும் அவர்களுடைய தலைவரையும் (இறுகப்) பற்றிக் கொள் என பதில் சொன்னார்கள்.

www.sufimanzil.org

பனு இஸ்ரவேலர்கள் 71 கூட்டமாக பிரிந்தார்கள். கிறிஸ்துவர்கள் 72 கூட்டமாக பிரிந்தார்கள். எனது உம்மத் இதை விட ஒன்று அதிகமாக (73 கூட்டமாக) பிரியும். பெரும்பான்மை சமூகத்தைத் தவிர அனைத்துப் பிரிவுகளும் வழிகேடாகும் என நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ உமாமா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

-தப்ரானி (8035, 8051 கபீர்)

சுன்னத்து இப்னு அபீ ஆஸிம் 68

இவ்வாறே எனது உம்மத்தை வழிகேட்டில் அல்லாஹுத் தஆலா ஒன்று சேர்க்க மாட்டான். அல்லாஹுத்தஆலாவுடைய உதவி கூட்டமைப்பின் மீதே இருக்கிறது. யார் தனித்து பிரிந்து விடுகிறாரோ அவர் நரகத்திலும் தனித்தே இருப்பார் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

-திர்மிதி 2167

(இந்த ஹதீதின் ஆரம்பப் பகுதி முஸ்த்தரக் அல்ஹாகிமில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1-120)

இவ்வாறான கூட்டமைப்பும் இல்லாத போது என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஹுதைபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள்.

அவர்களுக்கு ஒரு கூட்டமைப்போ ஒரு தலைவரோ இல்லை. (பல பிரிவுகளாக பிரிந்திருக்கிறார்கள்) என்றால், (என்ன செய்வது?) என்று கேட்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தப் பிரிவுகள் அனைத்தையும் விட்டு (விலகி) ஒதுங்கி விடு. ஒரு மரத்தின் வேர் பாகத்தை பற்களால் கவ்விப் பிடித்திருக்க நேர்ந்து அதே நிலையில் மரணம் உன்னைத் தழுவிக் கொண்டாலும் சரி (பிரிந்தவர்களுடன் சேராமல் இரு) என பதிலளித்தார்கள். - ஸஹீஹுல் புஹாரி 3606

இவ்வாறு இக்கட்டான நேரத்திலும் பிரிந்த கூட்டங்களுடன் சேராமல் இருப்பதே எமது கடமை என்பதை இந்த ஹதீஸ் தெளிவு படுத்திக் காட்டியுள்ளது.

**குறைந்த வயது கொண்ட இளைஞர்களாகவும், முதிர்ச்சியற்ற புத்தியுடையவர்களாகவும் இருப்பார்கள்.**

அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இறுதிக் காலத்தில் ஒரு கூட்டத்தினர் வருவார்கள். அவர்கள் குறைந்த வயது கொண்ட இளைஞர்களாயிருப்பார்கள். முதிர்ச்சியற்ற புத்தியுடையவர்களாயிருப்பார்கள். பூமியிலேயே மிகச் சிறந்த சொல்லை (திருக்குர்ஆன் வசனங்களை) எடுத்துச் சொல்வார்கள். அவர்கள் வேட்டைப் பிராணியி(ன் உடலி)லிருந்து

(வேடன் எறிந்த) அம்பு (அதன் மறுபக்கமாக) வெளிப்பட்டுச் சென்று விடுவதைப் போல் இஸ்லாத்திலிருந்து சென்று விடுவார்கள். அவர்களுடைய இறைநம்பிக்கை அவர்களுடைய தொண்டைக் குழிகளைத் தாண்டிச் செல்லாது. அவர்களை எங்கு நீங்கள் சந்தித்தாலும் கொன்று விடுங்கள். ஏனெனில், அவர்களைக் கொன்றவர்களுக்கு அவர்களைக் கொன்றதற்காக மறுமை நாளில் நற்பலனாக அமையும்' என்று கூறினார்கள்.

-ஸஹீஹுல் புஹாரி 5057, 3611

இன்று எமது சமூகத்தில் சன்மார்க்கக் கலையே தெரியாத சிலர், வழிகேடான கொள்கைகளைப் பின்பற்றி, தாமும் வழிகெட்டு, பிறரையும் வழி கெடுப்பதில் ஸ்தாபனங்கள், இயக்கங்கள் ரீதியாகச் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் தத்தமது ஊர்களில், காலம் காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பயன் மிக்க நல்ல காரியங்கள் அனைத்தையும், 'ஷிர்க்' என்றும், 'பித்அத்' என்றும் கூறி மக்கள் மத்தியில் குழப்ப நிலையையும், பிரிவினையையும் ஏற்படுத்தி வருகின்றனர். இவர்களைப் பற்றியே பின்வரும் ஹதீது எச்சரிக்கிறது.

**அறிவீனர்கள் மார்க்கப் பிரச்சாரம் செய்வார்கள்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் உங்களுக்கு கல்வியை வழங்கிய பின் அதை ஒரேடியாகப் பறித்துக் கொள்ள மாட்டான். மாறாக, கல்விமான்களை மரணிக்கச் செய்வதன் மூலம் அவர்களிடமிருந்து அதை (சன்னஞ் சன்னமாக)ப் பறித்துக் கொள்வான். பின்னர், அறிவீனர்களே எஞ்சியிருப்பார்கள். அவர்களிடம் மார்க்கத்தீர்ப்பு கோரப்படும். அவர்களும் தமது சொந்தக் கருத்துப்படி தீர்ப்பளித்து (மக்களை) வழி கெடுப்பார்கள். தாமும் வழிகெட்டுப் போவார்கள் என்று கூறினார்கள்.

-ஸஹீஹுல் புஹாரி 7307, 100. ஸஹீஹ் முஸ்லிம் 5191, 5192

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: (மறுமை நாளில்) ஒரு மனிதர் கொண்டு வரப்பட்டு அவர் நரகத்தில் வீசப்படுவார். கழுதை தனது செக்கைச் சுற்றி வருவதைப் போன்று அவர் நரகில் சுற்றி வருவார். அப்போது நரகவாசிகள் அவரைச் சுற்றி ஒன்று கூடி, 'இன்னாரே (உமக்கேன் இந்த நிலை?) நீர் (உலக வாழ்வின் போது) நற்செயல் புரியும்படி (மக்களுக்கு) கட்டளையிட்டு, தீமை புரிய வேண்டாம் என (அவர்களைத்) தடுத்துக் கொண்டிருக்கவில்லையா?' என்று கேட்பார்கள். அதற்கு அந்த மனிதர், 'நற் செயல் புரியும்படி (மக்களுக்கு) நான் கட்டளையிட்டேன். ஆனால் அந்த நற்செயலை நான் செய்யவில்லை. தீமை புரிய வேண்டாம் என்று (மக்களை) நான் தடுத்தேன். ஆனால், அந்தத் தீமையை நானே செய்து வந்தேன்' என்று கூறுவார்.

- ஸஹீஹுல் புஹாரி 7098

ஒருவர் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து, 'இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களே! நான் (மக்களுக்கு) நன்மையை ஏவி, தீமையில் இருந்து (அவர்களைத்) தடுக்க விரும்புகிறேன்' என்று கூறினார். அதற்கு அவர்கள், 'நீர் அதற்கு தகுதி

பெற்றுவிட்டீரா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், '(தகுதி பெற்றிருப்பதாகக்) கருதுகின்றேன்' என்று கூறினார். அதற்கு அவர்கள் அந்த மனிதரிடம், 'அல்லாஹ்வின் வேதத்தில் உள்ள மூன்று வசனங்களின் மூலம் இழிவடைவதை நீர் அஞ்சவில்லையாயின் அவ்வாறு செய்து கொள்ளலாம்' என்று கூறினார்கள். 'அந்த வசனங்கள் யாவை?' என அவர் கேட்டார்.

அதற்கு இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'உங்களை மறந்து விட்டு, நன்மை செய்யுமாறு மக்களை ஏவுகிறீர்களா?' (2:44) எனும் அல்லாஹ்வின் கூற்று முதலாவது வசனமாகும். 'இதை (மனதில்) நன்கு பதித்துக் கொண்டீரா?' என்ற கேட்டார்கள். அதற்கு அவர், 'இல்லை' என்று பதிலளித்து விட்டு, 'இரண்டாம் வசனமென்ன?' என்று கேட்டார். அதற்கு இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'நீங்கள் செய்யாதவற்றை ஏன் சொல்கின்றீர்கள்? நீங்கள் செய்யாதவற்றை நீங்கள் சொல்வது அல்லாஹ்விடம் மிகுந்த கோபத்திற்குரியது ஆகும்' (61:2,3) எனும் அல்லாஹ்வின் கூற்றாகும். 'இதை (மனதில்) நன்கு பதித்துக் கொண்டீரா?' என்று கேட்டார்கள். அதற்கும் அவர் 'இல்லை' எனக் கூறிவிட்டு, 'மூன்றாம் வசனம் என்ன?' என்று கேட்டார்.

அதற்கு இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உங்களுக்கு எதைத் தடை செய்தேனோ அதையே நான் செய்து, உங்களிடமிருந்து வேறுபட நான் விரும்பவில்லை. என்னால் இயன்றவரை சீர்திருத்தம் செய்வதையே நான் விரும்புகிறேன்' என்று ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதாகத் தெரிவிக்கும் வசனம் (11:88) ஆகும். இதை (மனதில்) நன்கு பதித்துக் கொண்டீரா?' என்று கேட்டார்கள். அதற்கும் அவர், 'இல்லை என்றே கூறினார். அப்படியானால், 'உன்னிலிருந்தே (சீர்திருத்தப் பணியைத்) துவங்கு' என்று அந்த மனிதரிடம் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

-தப்ஸீர் இப்னு கபீர் 2:44 வசனத்தின் விளக்கவுரை பாகம் 1 பக்கம் 150

(தமிழாக்கம் 1-151)தப்ஸீர் மர்தவவைஹ

**பல பொருள்களுக்கு இடமளிக்கும் வசனங்களைக் கொண்டு குழப்பம் விளைவிப்பார்கள்.**

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியதாவது: ' அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (நபியே!) அவனே உமக்கு இவ்வேதத்தை அருளினான். அதில் (பொருள்) உறுதி செய்யப்பட்ட வசனங்களும் உள்ளன. அவைதான் இவ்வேதத்தின் அடிப்படையாகும். பல பொருள்களுக்கு இடமளிக்கும் வேறு சில வசனங்களும் (அதில்) உள்ளன. யாருடைய உள்ளத்தில் கோளாறு உள்ளதோ அவர்கள், வேதத்தில் பல பொருள்களுக்கு இடமளிப்பவற்றையே பின்பற்றுவர். குழப்பம் செய்ய விரும்பியும், அவற்றுக்கு (சுயமாக) விளக்கம் அளிக்க விரும்பியுமே (அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள்.)

ஆனால் அவற்றின் (மெய்ப்) பொருளை அல்லாஹ்வையன்றி வேறு யாரும் அறியார். கல்வியில் தேர்ந்தவர்கள், நாங்கள் அவற்றை நம்புகிறோம். (அவை) அனைத்தும் எங்கள இறைவனிடமிருந்து வந்தவையே என்று கூறுவர். அறிவுடையோர் தவிர (வேறு யாரும் இதை)

உணர்வதில்லை. (3:7) எனும் இறைவசனத்தை ஓதிவிட்டு, பல பொருள்களுக்கு இடமளிக்கும் வசனங்களைப் பின்பற்றுவோரை நீங்கள் கண்டால், அவர்களைத்தான் (இந்த வசனத்தில்) அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான் (என்பதை அறிந்து), அவர்களிடம் எச்சரிக்கையாயிருங்கள் என்று சொன்னார்கள். -ஸஹீஹ் முஸ்லிம் 5179

**தலைமுடி சிரைத்து மொட்டை போடுவதை ஒரு மரபாகவும், வழிபாடாகவும் கொண்டிருப்பார்கள்.**

அபூசயீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'கிழக்குத் திசையிலிருந்து சிலர் புறப்படுவார்கள். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால், அது அவர்களுடைய நெஞ்செலும்புகளைத் தாண்டிச் செல்லாது. (வேட்டைக் காரனின்) அம்பு வேட்டையாடப்பட்ட பிராணியின் உடலிலிருந்து (மறு பக்கமாக) வெளியேறி விடுவதைப் போன்று அவர்கள் மார்க்கத்திலிருந்து வெளியேறிவிடுவார்கள். பிறகு அம்பானது வில்லின் நாண் உள்ள பகுதிக்குத் (தானாக) திரும்பாத வரை அவர்களும் மார்க்கத்திற்குத் திரும்பி வர மாட்டார்கள்' என்று சொன்னார்கள்.

'அவர்களின் அடையாளம் என்ன?' என்று வினவப்பட்டபோது, அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'மொட்டை போடுவ(தை ஒரு மரபாகவும் வழிபாடாகவும் கொண்டிருப்ப)துதான் (அவர்களின் அடையாளம்)' என்று பதில் சொன்னார்கள். - ஸஹீஹ் புஹாரி 7562

**மதிக்கவேண்டியவர்களை மதிக்க மாட்டார்கள்., இஸ்லாமியர்களை கொலை செய்வார்கள், சிலை வணங்கிகளை விட்டு விடுவார்கள்.**

அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வார்க்கப்படாத சிறிய தங்கக் கட்டி ஒன்றை யமன் நாட்டிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்கள் நால்வரிடையே பங்கிட்டார்கள். இதைக் கண்ட குறைஷியரும் அன்ஸாரிகளும் கோபமடைந்து, 'நஜ்த் வாசிகளின் தலைவர்களுக்கு இதைக் கொடுக்கிறார்கள். நம்மை விட்டு விடுகின்றார்களே' என்று கூறினார்கள்.

(இதையறிந்த) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், '(புதிதாக இஸ்லாத்தை தழுவிய) அவர்களை ஈர்ப்பதற்காகவே இவ்வாறு கொடுத்தேன்' என்று சொன்னார்கள். அப்போது கண்கள் பஞ்சடைந்த, நெற்றி புடைத்த, அடர்த்தியான தாடி கொண்ட, கன்னங்கள் உப்பிய, தலைமுடி மழிக்கப்பட்டிருந்த ஒரு மனிதர் முன்வந்து, 'முஹம்மதே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்' என்று சொன்னான். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நான் அல்லாஹ்வுக்கு மாறு செய்தால் வேறு யார் அவனுக்கு கீழ்படியப் போகிறார்கள்?' பூமியிலிருப்பவர்களில் என்னை அவன் நம்பிக்கைக்குரியவனாக ஆக்கியுள்ளான்(நான் வானிலிருப்பவர்களின் நம்பிக்கைக்கும் உரியவன்). ஆனால் நீங்கள் என்னை நம்ப மறுக்கின்றீர்களே?' என்று கேட்டார்கள். அப்போது மக்களில் ஒருவர் அவனைக் கொன்று விட

அனுமதி கேட்டார். அவர் காலித் பின் வலீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்றே நான் கருதுகிறேன். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரைத் தடுத்து விட்டார்கள்.

அந்த மனிதன் திரும்பிச் சென்ற போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'இந்த மனிதனின் பரம்பரையிலிருந்து ஒரு சமுதாயத்தார் தோன்றுவர். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது அவர்களுடைய தொண்டைக்குழிகளைத் தாண்டி (இதயத்திற்குள்) செல்லாது வேட்டையாடப்பட்ட பிராணியின் உடலிலிருந்து (அதன் மீது எய்யப்பட்ட) அம்பு வெளியேறி விடுவதைப் போன்று அவர்கள் இஸ்லாத்திலிருந்து வெளியேறி விடுவார்கள். இஸ்லாமியர்களையே அவர்கள் கொலை செய்வார்கள். சிலை வணங்கிகளை விட்டு விடுவார்கள். நான் அவர்க(ள் வாழும் நாட்க)ளை அடைந்தால் ஆது கூட்டத்தார் அழிக்கப்பட்டதைப் போன்று அவர்களை நிச்சயம் நான் அழிப்பேன்' என்று சொன்னார்கள். - ஸஹீஹுல் புஹாரி 7432.

இந்த ஹதீதில் இவ்வுலகிற்கே அருட்கொடையாக வந்துதித்த கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையே மதிக்காமல் அப்துல்லாஹ் இப்னு துல்குவைஸரா அத்தமீமிய்யு என்பவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை நீதமாகப் பங்கு வைக்கவில்லை எனக் குறை கூறினான். ஆனால் அவனும் கலிமாச் சொன்னவனாகவே இருந்தான். பின்னர் இவனுடைய பரம்பரையில் வரக்கூடிய ஒரு கூட்டத்தாரையும் அவர்களுடைய தன்மைகளையும் அவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெளிப்பட்டவர்கள் எ ன்பதையும் மேற்குறிப்பிட்ட ஹதீதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். அக்கூட்டத்தினர், அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் வெளிப்பட்ட கவாரிஜ்கள் என்றழைக்கப்படுவோராகும் என முஹத்திஸீன்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த கவாரிஜ்கள் கியாமத்து நாள் வரையில் தொடர்ந்து வந்து கொண்டேயிருப்பார்கள் என பின் வரும் ஹதீது தெளிவுபடுத்துகிறது.

கிழக்கிலிருந்து ஒரு கூட்டம் வெளியாகும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்களின் தொண்டைக்குழிக்குக் கீழே இறங்காது. ஒவ்வொரு கூட்டமும் மறையும் தருவாயில் இன்னொரு கூட்டம் தோற்றம் எடுக்கும். இவ்வாறு அவர்கள் தஜ்ஜால் வெளிப்படும் வரை தோன்றிக் கொண்டேயிருப்பார்கள்.

-முஸ்னத் அஹ்மத் 6952 (2/692), முஸ்னத் அப்திர் ரஸ்ஸாக் 20790.

அப்துல்லாஹ் இப்னு துல்குவைஸரா அத்தமீமிய்யு என்பவன் எவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தரம் குறைத்துபேசினானோ அதைப்போன்றுN அவர்களுடைய வழித்தோன்றல்கள், இன்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதர் என்றும், ஒரு தபால்காரனைப் போன்றவர், உம்மத்திற்காக சிபாரிசு செய்ய மாட்டார்கள், பிறக்கும்போது எவ்வித அற்புதங்களும் நடக்கவில்லை,

அவர்களுடையபெற்றோர் காபிர்கள் என தரம் குறைத்து பேசுவதோடு வாயால் மாத்திரம் நாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உண்மையாக நேசிக்கிறோம் என கூறுகின்றனர். ஒருவர் உண்மையாக ஒருவரை நேசித்தால் அவருடைய கௌரவத்திற்கு பங்கமேற்படுத்தும் வார்த்தையையோ குறைகளையோ பேசமாட்டார். ஆனால் இன்று இவர்கள் குறை தேடித் திரிகிறார்கள்.

இதுதான் உண்மையான நேசமா? இது போன்றே, அல்லாஹு தஆலாவால் பொருந்திக் கொள்ளப்பட்ட எத்தனையோ ஸஹாபாக்களை இணை வைக்கும் காரியங்களை செய்திருக்கிறார்கள். சொத்து பதவி ஆசை பிடித்தவர்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைக்கு மாற்றம் செய்தவர்கள் என குறை கூறுகின்றனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக உயிரையே கொடுக்கத் தயாராக இருந்த ஸஹாபாக்கள் எவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாற்றம் செய்ய முடியும் என்பதை இவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

மேலும், இஸ்லாத்துக்காக வாழ்க்கையையே அர்ப்பணித்து மார்க்க சட்டங்களை வகுத்த இமாம்களை, ஹதீதுகளை தொகுத்த அறிஞர்களை தரக்குறைவாக பேசுவதுடன், அவர்களுடைய நூல்களை குப்பைகள் என வாய்கூசாமல் குறை சொல்பவர்களாக உள்ளனர். தற்காலத்திலுள்ள உலமாக்களை வாய்க்கு வந்தோரெல்லாம் தூற்றிக் கொண்டிருக்கின்றனர். அவமரியாதையுடன் நடந்து கொள்கின்றனர். அமல்களைத் தடுக்கின்றனர். இவர்களது இவ்வாறான நிலைமைகளே, இவர்களை இனம் காட்டித் தருபவையாகவுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

**அமல்கள் குறைந்து விடும்.**

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், '(மறுமை நாள் நெருங்கும்போது) காலம் சுருங்கி விடும், செயல்பாடு (அமல்) குறைந்து போய்விடும், மக்களின் உள்ளங்களில் (பேராசையின் விளைவாக) கஞ்சத்தனம் உருவாக்கப்பட்டு விடும், குழப்பங்கள் தோன்றும், ஹர்ஜ் பெருகி விடும்' என்று கூறினார்கள். மக்கள் 'அல்லாஹ்வின் தூதரே! அது என்ன (ஹர்ஜ்)' என்று கேட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'கொலை, கொலை' என்று பதிலளித்தார்கள்.

- ஸஹீஹுல் புஹாரி 7061

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: இருள் மிகுந்த இரவின் பகுதிகளைப் போன்ற குழப்பங்கள் தோன்றுவதற்கு முன் விரைந்து (நற்) செயல்கள் புரிந்து கொள்ளுங்கள். (அக்குழப்பங்களின் போது) காலையில் இறைநம்பிக்கையாளனாக இருக்கும் ஒரு மனிதன் மாலையில் இறைமறுப்பாளனாக மாறிவிடுவான். மாலையில் இறைநம்பிக்கையாளனாக இருக்கும் ஒருவன் காலையில் இறைமறுப்பாளனாக மாறிவிடுவான். இவ்வுலகின் அற்ப சுகங்களுக்காகத் தனது மார்க்கத்தையே அவன் விற்று விடுவான். - ஸஹீஹ் முஸ்லிம் 186

அதாவது நற்செயல்கள் புரிய முடியாவண்ணம் குழப்பங்களும், பிரச்சனைகளும் தோன்றி, இருள் மிகுந்த இரவின் இருட்டைப் போன்று அவை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அதிகரிப்பதற்கு முன்பே நற் செயல்களில் தீவிரக் கவனம் செலுத்திட வேண்டும். கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு நன்மைகளைப் போட்டி போட்டுக் கொண்டு செய்திட வேண்டும். குழப்பங்கள் தோன்றி நன்மைகள் புரிகின்ற வாய்ப்பு அருகி விடும்போது ஒன்றும் செய்ய இயலாமல் போய்விடும். குழப்பங்களின் உச்சகட்டத்தில் ஒரே நாளில் நல்லவன் கெட்டவனாக மாறிவிடும் நிலை ஏற்படலாம். (அல் மின்ஹாஜ்)

மக்களின் அமல்களை அதிகரிக்க முயற்சியெடுக்க வேண்டிய காலகட்டத்தில் சந்தேகங்களை, குழப்பங்களை ஏற்படுத்தி அமல்களை குறைத்து மக்களை அல்லாஹுத்தஆலாவை விட்டும் தூரமாக்க முயற்சி செய்கின்றனர் இன்றைய குழப்பவாதிகள்.

தராவீஹ், தஸ்பீஹ், அவ்வாபீன் போன்ற தொழுகைகள் கிடையாது. திக்ரு, ஸலவாத் மஜ்லிஸ் நடாத்தக் கூடாது, மரணித்தவர்களுக்காக நன்மையான காரியங்களைச் செய்து அதன் கூலியை சேர்க்கக் கூடாது (ஸலவாத்துச் சொல்லக் கூடாது) என எத்தனையோ அடுக்கிக் கொண்டே போகலாம். இதற்கும் மேலாக கடமையான விசயங்களையும் குறைப்பதற்கு முயற்சித்து களாத்தொழுகையில்லை, ஆயுளில் ஒரு தடவை ஜகாத் கொடுத்தால் போதும், ஸஹாபாக்களைப் பின்பற்றத் தேவையில்லை எனவும் கூறுகின்றனர். மேற்சொன்ன விசயங்களுக்குரிய ஆதாரங்களை (நபி மொழிகளை) கண்டறியாமல், அவைகளுக்கு ஆதாரம் இல்லையென மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும் இவர்கள் எந்த வகையிலும் அல்லாஹ்வை அஞ்சி நடப்பவர்கள் எனக் கூற முடியாது.

**இன்றிருக்கும் நயவஞ்சகர்கள் நிலை**

ஹுதைபா பின் அல்யமானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நயவஞ்சகம் என்பதெல்லாம் (மக்கள் சிலரிடம்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தில்தான் இருந்தது. இன்றோ, இறை நம்பிக்கைக்குப் பின் இறைமறுப்பு மட்டுமே உள்ளது. -ஸஹீஹுல் புஹாரி 7114.

அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தில் சிலர் உள்ளத்தில் இறைமறுப்பையும் நாவில் இறைநம்பிக்கையையும் கொண்டிருந்த நயவஞ்சகர்களாக (முனாபிக்) இருந்தனர். இஸ்லாத்தின் தொடக்கக் காலமாக அது இருந்ததால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அந்த நயவஞ்சகர்கள் திருந்துவதற்கு வாய்ப்பளித்தார்கள். ஆனால், இன்றோ இஸ்லாம் பலம் பெற்று விட்டது. இன்று இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் இஸ்லாத்திற்கெதிராக செயல்படுகிறார் என்றால் அது இறைமறுப்பைத் தவிர வேறெதுவாகவும் இருக்க முடியாது. இத்தகையோரிடம் விட்டுக் கொடுத்து நடக்க வேண்டிய தேவை இல்லை. இங்கு இறைமறுப்பு (குப்ர்) என்பது, தலைமைக்குக் கட்டுப்பட மறுக்கும் அறியாமைக் கால செயலையே குறிக்கும்.

(பத்ஹுல் பாரி)

ஹுதைபா பின் அல்யமானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: இன்றிருக்கும் நயவஞ்சகர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்திலிருந்த நயவஞ்சகர்களை விட மோசமானவர்கள் ஆவர். (ஏனெனில்) அன்று அவர்கள் இரகசியமாகச் செயல்பட்டு வந்தார்கள். இன்றோ இவர்கள் பகிரங்கமாகச் செயல்படுகின்றார்கள். -ஸஹீஹுல் புகாரி 7113.

**நாங்களோ எமது மூதாதையினரோ கேள்விப்பட்டிராத விசயங்களை சொல்வார்கள்.**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: எனது சமுதாயத்தில் இறுதிக் காலத்தவரிடையே சிலர் தோன்றுவார்கள். நீங்களோ உங்கள் மூதாதையரோ கேள்விப்பட்டிராத (புதுப்புது) ஹதீதுகளையெல்லாம் உங்களிடம் அவர்கள் சொல்வார்கள். ஆகவே அவர்கள் குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன்.

-ஸஹீஹ் முஸ்லிம் முன்னுரை 13, 14.

**நல்லவர்கள் குறைந்து விடுவதும், வழிகேடர்கள் அதிகரிப்பதும்**

ஹுதைபா பின் அல் யமானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: நல்லவர்களில் முதன்மையானவர்கள் முதலாவதாகவும் அவர்களுக்கு அடுத்த (படித்தரத்திலுள்ள)வர்கள் அடுத்ததாகவும் (இவ்வுலகை விட்டுப்) போய் விடுவார்கள். (இவ்வாறு நல்லவர்கள் மறைந்த பின் இப்புவியில்) மட்டமான வாற்கோதுமை போன்ற, அல்லது மட்டமான பேரீச்சம் பழம் போன்ற தரம் தாழ்ந்த மக்களே எஞ்சியிருப்பார்கள். அவர்களை அல்லாஹ் சற்றும் பொருட்படுத்த மாட்டான்.

-ஸஹீஹுல் புகாரி 6434, 4156

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் குறைந்த எண்ணிக்கை கொண்ட மக்களிடையேதான் தோன்றியது. அது தோன்றிய பழைய நிலைக்கே திரும்பிச் செல்லும். அந்தக் குறைந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு சுபசோபனம் உண்டாகட்டும். -ஸஹீஹ் முஸ்லிம் 232.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், முன்னறிவிப்புச் செய்த வழிகேடர்களின் ஒரு சில அடையாளங்களை நாம் முன் வைத்திருக்கிறோம். சிந்திப்பவர்களுக்கு இவைகள் போதுமான ஆதாரங்களாகும்.

**வஹ்ஹாபிஸத்தின் குழப்பத்தில் இணை வைத்தல்**

வஹ்ஹாபிஸயத்தைப் பின்பற்றுபவர்கள் முஸ்லிம்களின் ஈமானில் குழப்பம் விளைவித்து மக்களை வழிகெடுப்பதற்காக சுன்னத் வல் ஜமாஅத்தினரை இணை வைப்பவர்களாக கருதுகிறார்கள். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அல்லாஹ்வின்

மீதாணையாக எனது(இறப்பு)க்குப் பின்னால் நீங்கள் இணை வைப்பவர்களாக ஆகிவிடுவீர்களோ என்று நான் பயப்படவில்லை என்று கூறியிருப்பதை கவனிப்போம்.

உக்பா பின் ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: ஒரு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புறப்பட்டு வந்து, இறந்தவர்களுக்காக (ஜனாஸா தொழுகை) தொழுவித்ததைப் போன்று உஹதுப் போர் உயிர்த் தியாகிகளுக்காக (ஜனாஸா தொழுகை) தொழுவித்தார்கள். பிறகு மேடைக்கு (மிம்பருக்கு) வந்து, நிச்சயமாக, நான் உங்களுக்காகக் காத்திருப்பேன். உங்களுக்கு நான் சாட்சி ஆவேன். மேலும், நான் இப்போது (கவ்ஸர் என்னும்) எனது தடாகத்தைக் காண்கிறேன். எனக்கு பூமியினுடைய கருவூலங்களின் திறவு கோல்கள், கொடுக்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வின் மீதாணையாக ஏன(து இறப்பு)க்குப் பின்னால் நீங்கள் இணைவைப்பவர்களாக ஆகிவிடுவீர்களோ என்று நான் பயப்படவில்லை. ஆனால் (உலகத்திற்காக) நீங்கள் ஒருவரோடொருவர் (போட்டியிட்டுக் கொண்டு) மோதிக் கொள்வீர்களோ என்றுதான் பயப்படுகிறேன் என்று கூறினார்கள்.

-ஸஹீஹுல் புஹாரி 4085, 4042, 3596, 1344, 6426, 6590

ஸஹீஹ் முஸ்லிம் 4602, 4603.

அல்லாஹ்வின் மீதாணையாக என(து இறப்பு)க்குப் பின்னால் நீங்கள் இணைவைப்பவர்களாக ஆகிவிடுவீர்களோ என்று நான் பயப்பட வில்லை என்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பது இந்த வஹ்ஹாபியிஸத்தைப் பின்பற்றுபவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

**அறிவீனர்களின் குழப்பத்தில் பித்அத்**

பித்அத் என்றால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யாதது புதிதாக உருவாக்கப்பட்டது என பிரச்சாரம் செய்வதை நாம் அறிந்திருக்கிறோம். இவ்வாறு தவறான விளக்கத்தை முன்வைத்து அதிகமான பெரும்பான்மை முஸ்லிம்களை, வழிதவறியவர்கள், நரகவாதிகள் என சொல்லி அவர்கள் முஸ்லிம்களல்லர் எனவும் கூறுகின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் உயிரையே அர்ப்பணித்து மார்க்கத்தை விளங்கி பாதுகாத்தவர்களும், அல்குர்ஆனில் அல்லாஹுத்தஆலாவினால் பொருந்திக் கொள்ளப்பட்டவர்கள் எனக் கூறப்பட்டவர்களுமான ஸஹாபா பெருமக்களை வழி தவறியவர்கள், நரகவாதிகள் எனச் சொல்லத் துணிந்து விட்டனர்.

ஸஹாபாக்கள் என்பவர்கள் அல்லாஹுத்தஆலாவினால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சகவாசத்திற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட நன்மக்கள் சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் சொல்லப்பட்ட அதிலும் ஹழ்ரத் அபூபக்கர், ஹழ்ரத் உமர், ஹழ்ரத் உதுமான், ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹும் போன்ற ஸஹாபாக்களும் இவர்களுடைய பார்வையில் நரகவாதிகளாகிவிட்டனர். (நஊதுபில்லாஹ்) இப்படியான படுமோசமான

பாரதூரமான கூற்றுக்களை நயவஞ்சகத்தனமாக பொதுமக்களுக்கு கூறுபவர்கள் உண்மை முஸ்லிம்களாக இருக்க முடியாது என்பதில் சந்தேகமில்லை.

இந்த குழப்பவாதிகள் கூறுவது போன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யாதவைகள் புதிதாக உருவாக்கப்பட்ட அழகிய நடைமுறைகள் வழிகேடான பித்அத் என்றால் பின்னால் வரும் பொன்மொழிகளில் கூறப்படுகின்ற சம்பவங்களுக்கு இவர்களால் என்ன பதிலைத்தான் கூற முடியும்?

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் செய்யாததை செய்த அபுபக்கர், உமர், ஸைத் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹும் அதை அங்கீகரித்த அனைத்து ஸஹாபாக்களும்.

(வேத அறிவிப்பை எழுதுவோரில் ஒருவராக இருந்த) ஸைத் இப்னு தாபித் அல் அன்ஸாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

யமாமா போர் நடைபெற்ற பின் ஹழ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், எனக்கு ஆளனுப்பி (என்னை அழைத்து வரச் சொன்)னார்கள். (நான் சென்றேன்) அங்கே அவர்களுடன் ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் இருந்தார்கள். அப்போது ஹழ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: 'ஹழ்ரத் உமர் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் என்னிடம் வந்து, 'இந்த யமாமா போரில் ஏராளமான குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ்கள் கொல்லப்பட்டு விட்டனர். (இறைமறுப்பாளர்களுடன் போர் நடக்கும்) பல்வேறு இடங்களில் குர்ஆன் அறிஞர்களான ஹாபிழ்கள் ஏராளமானோர் கொல்லப்பட்டு, அதனால் குர்ஆனின் பெரும்பகுதி (நம்மை பிட்டுப் ) போய்விடுமோ என நான் அஞ்சுகிறேன். (ஆகவே), தாங்கள் குர்ஆனை திரட்டி ஒன்று சேர்க்க உத்தரவிட வேண்டுமென நான் கருதுகின்றேன்;' என்று கூறினார்கள். நான், 'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யாத ஒன்றை நாம் எப்படி செய்வது?' என உமர் ரலியல்லாஹுஅன்ஹு அவர்களிடம்கேட்டேன். அதற்கு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'அல்லாஹ்வின் மீதாணையாக! இது (குர்ஆனைத் திரட்டுவது) நன்மை(யான பணி)தான்' என்று கூறினார்கள்.

இதற்காக என் மனதை அல்லாஹ் விரிவாக்கும் வரை இது விசயத்தில் (தொடர்ந்து) அவர்கள் என்னிடம் வ வலியுறுத்திக் கொண்டேயிருந்தார்கள். (முடிவில்) உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கருதியதை(யே) நானும் (உசிதமானதாகக்) கண்டேன். இதை அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னிடம் தெரிவித்தபோது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏதும் பேசாமல் அருகில் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

(பிறகு) அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (என்னிடம்) (ஜைதே!) நீங்கள் புத்திசாலியான இளைஞர். நாங்கள் (எந்தவிதத்திலும்) சந்தேகப்பட மாட்டோம். நீங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக வஹீ (வேத வசனங்களை) எழுதக் கூடியவராயிருந்தீர்கள். எனவே, நீங்கள் குர்ஆனைத் தேடிக் கண்டு பிடித்து (ஒரே பிரதியில்) ஒன்று திரட்டுங்கள் என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீதாணையாக! மாலைகளில் ஒன்றை நகர்த்த வேண்டுமென எனக்கு அவர்கள் கட்டளையிட்டிருந்தாலும் கூட அது எனக்குப் பளுவாக இருந்திருக்காது. குர்ஆனை ஒன்று திரட்டும்படி எனக்கு அவர்கள் கட்டளையிட்டது அதைவிட எனக்குப் பளுவாக இருந்தது. நான், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யாத ஒன்றை நீங்கள் எப்படிச் செய்கிறீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்லாஹ்வின் மீதாணையாக! இது நன்மை(யான பணி) தான் என்று பதிலளித்தார்கள். இதையே அன்னார் என்னிடம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். முடிவில் எதற்காக அபூபக்கர் மற்றும் உமர் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகியோரின் மனத்தை அல்லாஹ் விரிவாக்கினானோ அதற்காக என் மனத்தையும் அல்லாஹ் விரிவாக்கினான். (குர்ஆனை ஒன்று திரட்ட முன்வந்தேன்.) ஆகவே, (மக்களின் கரங்களிலிருந்த) குர்ஆன் (சுவடிகளைத்) தேடினேன். அவற்றை பேரீச்ச மட்டைகள், ஓடுகள் மற்றும் (குர்ஆனை மனனம் செய்திருந்த) மனிதர்களின் உள்ளங்களிலிருந்து திரட்டினேன்.

-ஸஹீஹுல் புஹாரி 4986, 4679

இந்த ஹதீதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யாததை நீங்கள் எப்படி செய்வீர்கள் என அபூபக்கர், உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களைப் பார்த்து கேட்டதும் பின்னர் அவ்விருவரிடமும் ஸைத் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹு கேட்டதும் கவனிக்கத் தக்க விசயமாகும்.

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யாததைச் செய்த உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், அதை அங்கீகரித்து செயல்படுத்திய ஸஹாபாக்களும்**

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்:

ரமலானின் இரவுத் தொழுகையை அவரவர் தனியாகத் தொழுது கொள்ளும்) இன்னிலையில் மக்கள் இருக்கும் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணித்தார்கள்.

அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்திலும் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஆட்சியின் ஆரம்பக் காலத்திலும் நிலைமை இவ்வாறே இருந்தது' என்று இமாம் இப்னு ஷிஹாப் ஸுஹ்ரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.

-ஸஹீஹுல் புஹாரி 2008-2009

அப்துர் ரஹ்மான் பின் அப்துல் காரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாவது: நான் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் ரமழான் மாதத்தின் ஓர் இரவில் இருந்தனர். சிலர் தனித்துத் தொழுது கொண்டிருந்தனர். சிலரைப் பின்பற்றிச் சிறு கூட்டத்தினர் தொழுது கொண்டிருந்தனர். அப்போது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'இவர்கள் அனைவரையும் ஓர் இமாமின் கீழ் திரட்டினால் அது சிறப்பாக அமையுமே!' என்று கூறிவிட்டு, அந்த முடிவுக்கு உறுதியாக வந்து, மக்களை உபை பின் கஅபு ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பின்னால்

திரட்டினார்கள். பின்னர், மற்றொரு இரவில் அவர்களுடன் நான் சென்றேன். மக்களெல்லாம் தங்கள் இமாமைப் பின்பற்றித் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் نِعْمَ الْبِدْعَةُ هَذِهِ

(நிஃமல் பித்அது வாஹிதிஹி) 'இந்தப் புதிய ஏற்பாடு' நன்றாக இருக்கிறது. இப்போது நின்று வணங்குவதை விட உறங்கி விட்டுப் பின்னர் (இரவின் பிற்பகுதியில்) வணங்குவது சிறந்ததாகும்' என்று கூறினார்கள். மக்கள் இரவின் முற்பகுதியில் தொழுது வந்தனர். இரவின் கடைசி நேரத்தில் தொழுவதைக் குறித்தே இவ்வாறு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். - ஸஹீஹுல் புகாரி 2010

இதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய காலத்திலோ அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஆட்சிக்காலத்திலோ இல்லாத ஒரு செயலை உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உருவாக்கி نِعْمَ الْبِدْعَةُ هَذِهِ நிஃமல் பித்அது ஹாதிஹி 'இந்தப் புதிய ஏற்பாடு' நன்றாக இருக்கிறது எனக் கூறி ரமலானுடைய மாதத்தில் ஒரு இமாமைப் பின்பற்றி இரவுத் தொழுகையை இரவின் ஆரம்பத்தில் ஜமாஅத்தாக தொழ வைத்தார்கள். இதை எந்த ஒரு ஸஹாபியாவது தடுக்கவோ அல்லது வழிகேடான பித்அத் என்றோ கூறாமல் அனைத்து சஹாபாக்களும் பின்பற்றினார்கள்.

உமர் ரலியல்லாஹு அன்ஹு, அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலங்களிலும் தராவீஹ் 20 ரக்அத்துகள்.

மேலும் ரமலானுடைய இரவுத் தொழுகையான (தராவீஹ்) 20 ரக்அத்துகள் தொழுவிக்கும்படி உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏவியதாகவும் அவ்வாறே அவர்களுடைய காலத்திலும் நடைபெற்றும் வந்தது என்பதை பின்வரும் ஹதீது தெளிவுபடுத்துகிறது.

யஹ்யா பின் ஸஈத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: நிச்சயமாக இருபது ரக்அத் ஜனங்களுக்கு தொழுகை நடத்த உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருவருக்கு கட்டளையிட்டார்கள்.

-முஸன்னபு இப்னு அபீஷைபா 2-392

ஸாயிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் நாங்கள் (தராவீஹ்) இருபது ரக்அத்தும் வித்ரும் தொழுபவர்களாக இருந்தோம்.

-பைஹகி மஃரிபதுஸ்ஸுனன் 4-42.

(இந்த ஹதீதின் அறிவிப்புத் தொடர் ஸஹுஹ் என்பதாக இமாம் நவவி ரஹ்மதுல்லாஹ் அவர்கள் குலாஸவில் குறிப்பிட்டிருப்பதாக மிர்காத் 2-175லும் இமாம் சுப்கி ரஹ்மத்துல்லாஹி அவர்கள் ஷரஹுல் மின்ஹாஜில் குறிப்பிட்டிருப்பதாக பதாவா சுயூத்தி 1-350(5)லும் இப்னுல் ஆஸாரிஸ் சுனன் 2-54லும் குறிப்பிட்டுள்ளனர்.)

இதனடிப்படையிலேயே உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் செய்து வந்தார்கள்.

ஸாயிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் ரமலான் மாதத்தில் இருபது ரக்அத்துகள் மக்கள் தொழுது வந்தார்கள். உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்திலும் இவ்வாறுதான் இருந்தது. அவர்கள் தொழுகையின் கடினத்தால் கம்பு ஊன்றி நிற்பர். –சுனனுல் பைஹகி 2-496.

(இந்த ஹதீதின் அறிவிப்பு ஸஹீஹ் என்பதாக இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹ் ஷரஹுல் முஹத்தப் 4-32 ல் குறிப்பிட்டுள்ளார்கள்.)

அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் செய்து வந்ததாக பின்வரும் ஹதீது தெளிவு படுத்துகிறது.

அப்துர்ரஹ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நிச்சயமாக அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ரமலானில் நன்றாக ஓதத் தெரிந்தவர்களை அழைத்து அவரிலுள்ள ஒருவரிடம் ஜனங்களுக்கு இமாமாக இருந்து இருபது ரக்அத்துக்கள் தொழுகை நடத்த ஆணை பிறப்பித்தார்கள். அலி ரலியல்லாஹுஅன்ஹு அவர்களின் தலைமையில் வித்ர் தொழுகையும் நடந்து கொண்டிருந்தது. –சுனனுல் பைஹகி 2-496

(அப்துர் ரஹ்மான் ரலியல்லாஹு அன்ஹு, அலி ரலியல்லாஹுஅன்ஹுவில் நின்றும் ஹதீது கேட்டவரும், அதிகமாக ஹதீதுகளை அறிவித்தவரும் நல்லவரும், சிறந்த அறிஞருமாக இருந்தார்கள் என்பதாக இப்னு ஸஃத் ரஹ்மத்துல்லாஹி அவர்கள் தபகாத் 6-175 ல் குறிப்பிட்டுள்ளார்கள்.)

இதனடிப்படையிலேயே அன்று தொட்டு இன்று வரையிலும் செய்து வருகிறோம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வபாத்திற்குப் பின்னால் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் இஸ்லாத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டதும் அதை செயல்படுத்திய ஸஹாபாக்களும்.

சாயிப் பின் யஸீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களது காலத்திலும், அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது ஆட்சியிலும், உமர் ரலியல்லாஹுஅன்ஹு அவர்களது ஆட்சியின் தொடக்கத்திலும் எங்களிடம் மது அருந்தியவர்கள் கொண்டு வரப்பட்டால் அவரை நாங்கள் கையாலும், காலணியாலும் மேலங்கியாலும் அடிப்போம். உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது ஆட்சி காலத்தின் இறுதியில் (குடிகாரருக்கு) நாற்பது சாட்டையடி வழங்கிடுமாறு அன்னார் உத்தரவிட்டார்கள். (மது அருந்தும் விஷயத்தில்) மக்கள் அத்துமீறி நடந்து கொண்டு கட்டுப்பட மறுத்தபோது (குடிகாரருக்கு) அன்னார் எண்பது சாட்டையடி வழங்கினார்கள்.

-ஸஹீஹுல் புகாரி, 6779, 6773, 6776,

ஸஹீஹ் முஸ்லிம் 3512, 3513, 3515.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வபாத்திற்குப் பின்னால் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் ஜும்ஆ நாளில் இரண்டாவது பாங்கு ஏற்படுத்தப்பட்டதும் அதை செயல்படுத்திய ஸஹாபாக்களும்.

ஸாயிப் பின் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்திலும் அபூபக்கர், உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களினது காலத்திலும் ஜும்ஆ நாளில் இமாம் மிம்பரில் அமர்ந்த பின் (அதான்) சொல்லப்பட்டு வந்தது. உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் மக்கள் பெருகிய போது கடை வீதியில் (பாங்கு, இகாமத் தவிர) மூன்றாவது அழைப்பு (அதான்) மேலதிகமானது. இது நிலை பெற்று விட்டது.

-ஸஹ Pஹுல் புகாரி 916

இதனடிப்படையிலேயே அன்று தொட்டு இன்று வரையிலும் செய்து வருகிறோம்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வபாத்திற்குப் பின்னால் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் இஸ்லாத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டதும் அதை செயல்படுத்திய ஸஹாபாக்களும்.

சாயிப் பின் யஜீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஆட்சியிலும், உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது ஆட்சியின் தொடக்கத்திலும் எங்களிடம் மது அருந்தியவர் கொண்டு வரப்பட்டால் அவரை நாங்கள் கையாலும் காலணியாலும் மேலங்கியாலும் அடிப்போம். உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது ஆட்சிகாலத்தின் இறுதியில் (குடிகாரருக்கு) நாற்பது சாட்டையடி வழங்கிடுமாறு அன்னார் உத்தரவிட்டார்கள். (மது அருந்தும் விஷயத்தில் மக்கள் அத்துமீறி நடந்து கொண்டு கட்டுப்பட மறுத்தபோது (குடிகாரருக்கு) அன்னார் எண்பது சாட்டையடி வழங்கினார்கள்.

- ஸஹீஹுல் புஹாரி 6779, 6773, 6776, ஸஹீஹ் முஸ்லிம் 3512, 3513, 3515.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வபாத்திற்குப் பின்னால் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் ஜும்ஆ நாளில் இரண்டாவது பாங்கு ஏற்படுத்தப்பட்டதும் அதை செயல்படுத்திய ஸஹாபாக்களும்.

ஸாயிப் பின் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களினது காலங்களிலும் ஜும்ஆ நாளில் இமாம்

மிம்பரில் அமர்ந்த பின் (அதான்) சொல்லப்பட்டு வந்தது. உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் மக்கள் பெருகிய போது கடை வீதியில் (பாங்கு, இகாமத் தவிர) மூன்றாவது அழைப்பு (அதான்) மேலதிகமானது. இது நிலைபெற்று விட்டது.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்ந்த காலத்திலே ஸஹாபாக்களால் ஏற்படுத்தப்பட்ட அழகிய நடைமுறை (அமல்)களை பித்அத் என தடுக்காமல் அங்கீகரித்த அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

**பள்ளிவாசலில் வட்டமாக அமர்ந்து திக்ர் செய்த நபித்தோழர்கள்.**

அபூசயீத் அல்குத்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: பள்ளிவாசலில் வட்டமாக அமர்ந்திருந்த ஒரு குழுவினரிடம் முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் புறப்பட்டு வந்து, நீங்கள் இங்கு அமர்ந்திருப்பதற்கு என்ன காரணம்? என்று கேட்டார்கள். அதற்கு அக்குழுவினர், அல்லாஹ்வை நினைவு கூர்ந்து போற்றுவதற்காக அமர்ந்துள்ளோம் என்று கூறினர். அதற்கு முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இதற்காகத்தான் நீங்கள் அமர்ந்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அக்குழுவினர், அல்லாஹ்வின் மீது சத்தியமாக அதற்காகத்தான் நாங்கள் அமர்ந்துள்ளோம் என்று கூறினர்.

முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: உங்கள் மீது சந்தேகப்பட்டு நான் உங்களைச் சத்தியமிட்டுக் கூறச் சொல்லவில்லை. அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் நெருங்கியிருந்த அளவுக்கு நெருக்கமாக இருந்தவர்களில் எவரும் என்னை விடக் குறைவான ஹதீதுகளை அவர்களிடமிருந்து அறிவிக்கவில்லை. (நானே மிகக் குறைவான ஹதீதுகளை அறிந்தவன்)

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஒருமுறை) வட்டமாக அமர்ந்திருந்த தம் தோழர்களில் சிலரிடம் வந்து, நீங்கள் (இங்கு) அமர்ந்திருப்பதற்கு என்ன காரணம்? என்று கேட்டார்கள். அதற்குத் தோழர்கள், அல்லாஹ் எங்களுக்கு இஸ்லாத்திற்கு நேர்வழி காட்டியதற்காகவும், எங்களுக்கு அருட்கொடைகள் புரிந்ததற்காகவும் அவனை நினைவு கூர்ந்து போற்றுவதற்காக அமர்ந்திருக்கிறோம் என்று கூறினர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இதற்காகத்தான் நீங்கள் அமர்ந்துள்ளீர்களா? என்று கேட்டார்கள்.

அதற்கு தோழர்கள், அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இதற்காகத்தான் நாங்கள் அமாந்;துள்ளோம் என்று கூறினர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அறிந்து கொள்ளுங்கள்! உங்கள் மீது சந்தேகம் கொண்டுச் சத்தியமிட்டு உங்களிடம் நான் கேட்கவில்லை. மாறாக,(வானவர்) ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்னிடம் வந்து, வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் உங்களைப் பற்றி வானவர்களிடம் பெருமையுடன் பேசிக் கொள்கிறான் என்று தெரிவித்தார்கள் என்றார்கள்.

- ஸஹீஹ் முஸ்லீம் 5233

**தொழுகையில் அதிகப்படியாக அழகிய நடைமுறைகளை ஏற்டுபத்திய நபித்தோழர்கள்.**

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் மூச்சிறைக்க (விரைந்து) வந்து தொழுகை வரிசையில் சேர்ந்து, 'அல்ஹம்துலில்லாஹி ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரக்கன் ஃபீஹி (தூய்மையும் வளமும் வாய்ந்த அதிகமான புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது) என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தொழுகையை முடித்ததும் 'உங்களில் இவ்வார்த்தைகளை மொழிந்தவர் யார்?' என்று கேட்டார்கள். மக்கள் (பதிலளிக்காமல்) அமைதியாக இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (மீண்டும்), உங்களில் இதை மொழிந்தவர் யார்? ஏனெனில், அவர் தவறாக ஏதும் சொல்லவில்லை' என்று கூறினார். உடனே அந்த மனிதர் 'நான் மூச்சிறைக்க வந்து தொழுகையில் சேர்ந்தேன். ஆகவே, இவ்வாறு சொன்னேன்' என்று பதிலளித்தார். அப்போதுஅல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'பன்னிரண்டு வானவர்கள் தமக்கிடையே 'இதை எடுத்துச் செல்பவர் யார்?' எனும் விஷயத்தில் போட்டியிட்டுக் கொண்டிருந்ததை நான் கண்டேன்' என்று கூறினார். - ஸஹீஹ் முஸ்லிம் 1051.

ரிஃபாஆ இப்னு ராஃபிவு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பின்னே ஒரு நாள் தொழுது கொண்டிருந்தோம். அவர்கள் ருகூவிலிருந்து தலையை உயர்த்திய போது ஸமீஅல்லாஹு லிமன் ஹமிதஹ் எனக் கூறினார்கள். அவர்களுக்குப் பின்னாலிருந்த ஒரு மனிதர் றப்பனா வலகல் ஹம்து ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் ஃபீஹி என்று கூறினார். தொழுது முடித்ததும் இந்த வார்த்தைகளைக் கூறியவர் யார்? என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அந்த மனிதர் நான் என்றார். முப்பதுக்கும் மேற்பட்ட மலக்குகள் இதைப் பதிவு செய்வதில் போட்டி போட்டதை நான் கண்டேன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். - ஸஹீஹுல் புகாரி 799.

இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுது கொண்டிருந்தோம். அப்போது மக்களில் ஒருவர் அல்லாஹு அக்பர் கபீரா, வல்ஹம்து லில்லாஹி கதீரா, வசுப்ஹானல்லாஹி புக்ரத்தன் வஅஸீலா' (அல்லாஹ் மிகப் பெரியவன் என்று பெருமைப்படுத்துகிறேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது என்று அதிகமாகப் போற்றுகிறேன். அல்லாஹ் பரிசுத்தமானவன் என்று காலையிலும் மாலையிலும் அவனைத் துதிக்கிறேன்) என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'இன்ன இன்ன வார்த்தைகளை மொழிந்தவர் யார்?' என்று கேட்டார்கள். அப்போது மக்களில் ஒருவர், 'நான்தான் அல்லாஹ்வின் தூதரே!' என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நான் இதைக் கேட்டு வியப்புற்றேன். இதற்காக வானத்தின் வாசல்கள் திறக்கப்பட்டன' என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டதிலிருந்து நான் அதைக் கூறாமல் இருந்ததில்லை.

-ஸஹீஹ் முஸ்லிம் 1052

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு மனிதரைப் படைப் பிரிவொன்றுக்குத் தளபதியாக்கிஅ னுப்பினார்கள். அவர், தமது தொழுகையில் தம்தோழர்களுக்கு (குர்ஆன் வசனங்களை) ஓதி (தொழுவித்து) வந்தார். (ஒவ்வொரு முறையும்) ஓதி முடிக்கும் போது 'குல்ஹுவல்லாஹு அஹத்' எனும் (112ஆவது) அத்தியாயத்துடன் முடிப்பார். அப்படையினர் திரும்பி வந்த போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இதைப் பற்றி தெரிவித்தனர். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'எதற்காக இப்படிச் செய்கிறார் என்று அவரிடமே கேளுங்கள்' என்று கூற, அவர்களும் அவரிடம் கேட்டனர். அவர், 'ஏனெனில், அந்த அத்தியாயம் பேரருளாளனின் (ஏகத்துவப்) பண்புகளை எடுத்துரைக்கின்றது. நான் அதை (அதிகமாக) ஓதுவதை விரும்புகிறேன்' என்று சொன்னார்கள். (இதைக் கேள்விபட்ட) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'அல்லாஹ் அவரை நேசிக்கிறான் என்று அவருக்குத் தெரிவியுங்கள்' என்று கூறினார்கள். -ஸஹீஹுல் புகாரி 7375.

அபூசயீத் அல்குத்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர், 'குல்ஹுவல்லாஹு அஹத்' எனும் (112 வது) அத்தியாயத்தைத் திரும்பத் திரும்ப ஓதிக் கொண்டிருந்ததை ஒருவர் செவிமடுத்தார். விடிந்ததும் அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று அதைப் பற்றிக் கூறினார். (அவர் பேசிய விதம்) அந்த அத்தியாயத்தை(த் திரும்பத் திரும்ப ஓதியதை)க் குறைத்து மதிப்பிட்டதைப் போன்றிருந்தது. அப்போதுஅல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது சத்தியமாக! அந்த அத்தியாயம் குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதிக்குச் சமமானது' என்று சொன்னார்கள். -ஸஹீஹுல் புகாரி 7374.

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: ஒரு பஜ்ருத் தொழுகையின் போது பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் பிலாலே! இஸ்லாத்தில் இணைந்த பின் நீர் செய்த சிறந்த அமல் பற்றிக் கூறுவீராக! ஏனெனில் உமது செருப்போசையை சொர்க்கத்தில் நான் கேட்டேன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இரவிலோ பகலிலோ நான் உளுச்செய்தால் அவ்வுளுவின் மூலம் நான் தொழ வேண்டுமென்று நாடியதைத் தொழாமல் இருப்பதில்லை. இதுதான் எனது செயல்களில் சிறந்த செயல் என்று விடையளித்தார்கள். -ஸஹீஹுல் புகாரி 1149, ஸஹீஹ் முஸ்லிம்.

**அல் பாத்திஹா அத்தியாயத்தை மந்தரிப்பதற்காக ஓதிய நபித்தோழர்கள்.**

அபூசயீத் அல்குத்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தோழர்களிடையே சிலர் (ஒரு பயணத்தின் போது) ஓர்

அரபுக் குலத்தாரிடம் சென்றார்கள். அவர்களுக்கு அக்குலத்தார் விருந்தளிக்க முன்வரவில்லை. இந்நிலையில் அக்குலத்தாரின் தலைவனை தேள் கொட்டிவிட்டது. அப்போது அக்குலத்தார் (நபித்தோழர்களிடம் வந்து) 'உங்களிடம் (இதற்கு) மருந்து ஏதும் உள்ளதா? அல்லது மந்தரிப்பவர் எவரும் இருக்கிறாரா?' என்று கேட்டனர். அதற்கு நபித்தோழர்கள், 'நீங்கள் எங்களுக்கு விருந்தளிக்க முன்வரவில்லை. ஆகவே, நீங்கள் எங்களுக்கு (ஒரு) குறிப்பிட்ட கூலியைத் தந்தாலே தவிர (வெறுமனே) உங்களுக்கு நாங்கள் மந்தரிக்க மாட்டோம்' என்று கூறினர்.

உடனே, நபித்தோழர்களுக்காக அக்குலத்தார் (முப்பது ஆடுகள் கொண்ட) ஓர் ஆட்டு மந்தையைக் கூலியாக நிர்ணயித்தார்கள். நபித் தோழர்களில் ஒருவர் (எழுந்து சென்று) குர்ஆனின் அன்னை எனப்படும் 'அல்ஃபாத்திஹா' அத்தியாயத்தை ஓதித் தம்து எச்சிலைக் கூட்டி (கடிபட்ட இடத்தில்) உமிழந்தார். உடனே அவர் வலி நீங்கி குணமடைந்தார். (பேசிய படி) அவர்கள் ஆடுகளைக் கொண்டு வந்(து கொடுத்தனர். நபித் தோழர்கள், 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் (அனுமதி) கேட்காத வரை இதை நாம் எடுத்துக்கொள்ள கூடாது' என்று (தமக்குள்) பேசிக் கொண்டு அவ்வாறே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் (வந்து அனுமதி) கேட்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிரித்து விட்டு 'அல் பாத்திஹா' அத்தியாயம் மந்தரிப்பதற்குத் தகுந்தது என்று உமக்கு எப்படித் தெரியும்?' அந்த ஆடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கும் அதில் ஒரு பங்கு கொடுங்கள்' என்று சொன்னார்கள். -ஸஹீஹுல் புகாரி 5736, 5737

**அறியாமைக் கால மந்திரங்களில் இணை கற்பிக்கும் விசயம் இல்லாதிருப்பின் அவற்றைக் கூட அங்கீகரித்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.**

அவ்ஃப் பின் மாலிக் அல் அஷ்ஜஈ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நாங்கள் அறியாமைக் காலத்தில் மந்திரம் செய்து வந்தோம். எனவே (நபியவர்களிடம்), அல்லாஹ்வின் தூதரே! இது குறித்து தாங்கள் என்ன கருதுகிறீர்கள்.? என்று கேட்டோம். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (எங்களிடம்), நீங்கள் மந்திரிப்பதை என்னிடம் சொல்லி காட்டுங்கள். (இறைவனுக்கு) இணை கற்பிக்கும் வாசகம் இல்லையானால் மந்திரத்தில் எந்தக் குற்றமும் இல்லை என்று கூறினார்கள். -ஸஹீஹ் முஸ்லிம் 4427

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மந்திரம் செய்ய வேண்டாமெனத் தடை விதித்தார்கள். அப்போது அம்ர் பின் ஹஸ்ம் குடும்பத்தார் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! தேள் கடிக்காக மந்திரம் செய்யும் வழக்கம் எங்களிடம் இருந்தது. (ஆனால்), தாங்களோ மந்திரம் செய்ய வேண்டாமெனத் தடை விதித்து விட்டீர்கள் என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அ(வர்கள் மந்திரம் ஓதிய வாசகத்தைக் கூறுமாறு கேட்டார்கள். அவர்கள் அ(ந்த வாசகத்தைக் கூறிய போது

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நான் (இதில்) குறையெதையும் காணவில்லை. உங்களில் ஒருவரால் தம் சகோதரருக்குப் பயனளிக்க முடியுமானால் அவ்வாறே பயனளிக்கட்டும்! என்று கூறினார்கள்.

-ஸஹீஹ் முஸ்லிம் 4426

'பித்அத்' என்பதற்வு இவர்கள் கூறும் விளக்கம் தான் சரியாக இருக்குமானால் ஸஹாபாக்கள், தாபியீன்கள், நமது முன்னோர்கள் உட்பட இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய அனைத்து முஸ்லிம்களும் வழிதவறியவர்கள், நரகவாதிகள் என சொல்ல வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு ஆளாகி விடுவோம். (நஊதுபில்லாஹ்)

பித்அத் என்பதற்கு இவர்களது விளக்கம் பிழையானது என்பதை மனதில் இருத்திக் கொண்டு உண்மையான விளக்கத்தைப் பார்ப்போம்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

நம்முடைய இந்த (மார்க்க) விஷயத்தில், அதில் இல்லாத ஒன்றை யார் புதிதாகப் புகுத்துகின்றாரோ அது நிராகரிக்கப்பட வேண்டியதாகும்.

-ஸஹீஹ் முஸ்லீம் 3540

இந்த ஹதீதை நோக்கும் போது, இஸ்லாம் அனுமதிக்காத இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு முரணாக புதிதாக உருவாக்கப் படுபவைகளே இகழப்பட்ட (வழிகேடான) பித்அத்துகளாகும். இவைகளே தடுக்கப்பட வேண்டியவைகளாகும், என்பது நன்கு புலனாகும்.

மாறாக, இஸ்லாம் தடைவிதிக்காத, இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு முரணற்ற விதத்தில் புதிதாக ஏற்படுத்துபவைகள் ஏற்படக் கூடியவைகளே என்பதை முன்னால் கூறப்பட்ட பல சம்பவங்கள் எடுத்துக் கூறுகின்ற, ஹதீதுகள், இதற்குச் சான்றாக உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். பின்வரும் ஹதீதும் இதனையே தெளிவுபடுத்துகின்றது.

ஜரீர் பின் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: யார் இஸ்லாத்தில் (அதன் அடிப்படைக்கு முரண்படாத வகையில்) ஓர் அழகிய நடைமுறையை உருவாக்கி, அவருக்கு பின் அந்த நடைமுறை செயல்படுத்தப்படுகிறதோ அதன்படி செயல்படுபவர்களின் நன்மை போன்றது அ(ந்த நடைமுறையை உருவாக்கிய) வருக்கும் உண்டு. அதற்காக அவர்களது நன்மையில் எதுவும் குறைந்து விடாது.

யார் இஸ்லாத்தில் (அதன் அடிப்படைக்கு எதிரான) ஒரு தீய நடைமுறையை உருவாக்கி விட, அவருக்குப் பிறகும் அந்த நடைமுறை செயல்படுத்தப்படுகிறதோ அவருக்குப் பின் அதன்படி செயல்படுபவர்களின் பாவம் போன்றது அவருக்கு உண்டு. அதன்படி செயல்பட்டவர்களின் பாவத்திலிருந்து எதுவும் குறையாது என்று கூறினார்கள்.

-ஸஹீஹுல் முஸ்லிம் 5193, 1848

இதனடிப்படையிலேயே எமது சமூகத்தில் பல அமல்கள் பல வடிவில் காணப்படுகிறது.

ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வருகை தந்து அல்லாஹ்வின் தூதரே இஸ்லாத்தில் எந்த விசயம் சிறந்தது எனக்கேட்ட போது உணவளிப்பதும், அறிவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் ஸலாம் சொல்வதும் என பதிலளித்தார்கள். - ஸஹீஹுல் புகாரி 12

இதில் உணவளிப்பதும், ஸலாம் சொல்வதும் சிறந்த விசயமாக கூறப்பட்டுள்ளது உணவளித்தல் என்ற அமலை அமுல் படுத்துவதற்காகவே எமது சமூகத்தில் பல பெயர்களைக் கொண்ட அன்னதான வைபவங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பாரம்பரியம் இருந்து வருவதால் சமூகத்தில் விருந்தோம்பல் எனும் நற்காரியம் உறவினர்கள், நண்பர்கள், ஏனைய முஸ்லிம்களுக்கு மத்தியில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறே அல்லாஹுத்தஆலா நீங்கள் நின்றவர்களாகவும், உட்கார்ந்தவர்களாகவும் ஒரு பக்கம் சாய்ந்து படுத்தவர்களாகவும் அல்லாஹுத்தஆலாவை திக்ர் செய்யுங்கள் என்ற கட்டளைக்கேற்ப பலவாறான திக்ர் மஜ்லிஸ்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சமூகத்திலுள்ள நல்ல பாரம்பரியங்கள் அனைத்தையும் எடுத்துப் பார்க்கும் போது அவை மார்க்கத்திற்கு உட்பட்டதாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

இதனடிப்படையிலேயே தொழுகைக்குப் பின்னால் ஓதப்படும் கூட்டு (துஆ) பிரார்த்தனை அமைந்திருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதனை பொதுவாக ஆர்வமூட்டியதோடு சில சந்தர்ப்பங்களில் செய்துமிருப்பதால் இதனை அனைவரும் செய்து வருகின்றனர்.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: மக்கள் கடமையான தொழுகையை முடிக்கும் போது சப்தமாகத் திக்ரு செய்யும் நடைமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் இருந்தது. இந்த திக்ரின் சப்தத்தைக் கேட்டு மக்கள் தொழுகையை முடித்து விட்டார்கள் என்பதை நான் அறிந்து கொள்வேன். -ஸஹீஹுல் புகாரி 841.

ஜைத் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'ஒரு தடவை நானும் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், இன்னும் ஒருவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் இருந்தோம், அப்போது துஆ ஓதுங்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள். அப்போது நாங்கள் துஆ ஓதநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆமீன் கூறினார்கள்.

-ஸஹீஹுல் புகாரியின் ஷரஹு பத்ஹுல் பாரி பாகம் 1 பக்கம் 174 மற்றுமோர் பதிப்பில் பக்கம் 214.

பின்பற்றப்பட வேண்டிய நபித்தோழர்கள்.

அல்லாஹுத்தஆலா தனது திருமறையில்,

'முஹாஜிர்'களிலும் 'அன்ஸார்'களிலும் எவர்கள் (இஸ்லாத்தில்) முதலாவதாக முந்திக் (கொண்டு, விசுவாசங்) கொண்டார்களோ அவர்களையும், நற்கருமங்களில் (மெய்யாகவே) அவர்களைப் பின்பற்றியவர்களையும் பற்றி அல்லாஹ் திருப்தியடைகின்றான். அவர்களும் அல்லாஹ்வைப் பற்றித் திருப்தியடைகின்றனர். – அத்தௌபா 100

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

என் தோழர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தைச் செலவு செய்தாலும் (என் தோழர்களான) அவர்கள் (இறைவழியில்) செலவு செய்த இரு கைக் குவியல் அல்லது அதில் பாதியளவைக் கூட (அவரது) அந்த தர்மம் எட்ட முடியாது.

-ஸஹீஹுல் புகாரி 3673, ஸஹீஹ் முஸ்லிம் 4967, 4968.

குதைபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் உங்களுடன் இருப்பதை குறைவாகவே கருதுகிறேன். எனவே எனக்குப் பின் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு, உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை பின்பற்றுங்கள். அம்மார் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வழிகாட்டலையும் பின்பற்றுங்கள். இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு எதையாவது சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

-திர்மிதி 3663, இப்னுமாஜா 97, ஹாகிம் 3-75

முஸ்னத் அஹ்மது 5-399, இப்னு அபீஷைபா 12-11

அபூ மூஸா அல்அஷ்அரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: (ஒரு நாள்) நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் மஃரிப் தொழுகையை தொழுதோம். பிறகு நாங்கள், 'நாம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இஷாத் தொழுகை தொழும்வரை (இங்கேயே) அமர்ந்திருந்தால் நன்றாயிருக்கும்' என்று கூறிக் கொண்டு (அங்கேயே) அமர்ந்திருந்தோம்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்து, ஏன் இங்கேயே இருந்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். நாங்கள், 'அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் தங்களுடன் மஃரிப் தொழுகையைத் தொழுது விட்டுப் பிறகு தங்களுடன் இஷாத் தொழுகையையும் தொழும்வரை அமர்ந்திருப்போம் என்று முடிவு செய்துள்ளோம்' என்றோம்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'நீங்கள் செய்தது நன்று அல்லது சரி என்று சொல்லி விட்டு, வானத்தை நோக்கி தமது தலையை உயர்த்தினார்கள். (பொதுவாக) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதிகமாக வானத்தை நோக்கித் தமது தலையை உயர்த்தக் கூடியவராக இருந்தார்கள்.

பிறகு நட்சத்திரங்கள் வானத்திற்குப் பாதுகாப்பாகும். நட்சத்திரங்கள் போய்விட்டால் வானத்திற்கு வாக்களிக்கப்பட்டது வந்து விடும். நான் என் தோழர்களுக்கு பாதுகாப்பு ஆவேன். நான் போய்விட்டால் என் தோழர்களுக்கு வாக்களிக்கப்பட்டது வந்து விடும். என் தோழர்கள் என் சமுதாயத்திற்கு பாதுகாப்பு ஆவார்கள். என் தோழர்கள் போய்விட்டால் சமுதாயத்திற்கு வாக்களிக்கப்பட்டது வந்து விடும்' என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்புத் தோழர்கள் இஸ்லாத்திற்காக எத்தனையோ தியாகங்களைப் புரிந்தவர்கள். அல்லாஹ்வின் உகப்பையும் அவனுடைய தூதரின் அன்பையும் பெற்றவர்கள். இந்த மார்க்கத்தை வெளிக் கொணர நபித் தோழர்கள் வாழ்ந்த காலத்தையே அல்லாஹ் தேர்ந்தெடுத்தான். இன்று முஸ்லிம்கள் பெற்றுள்ள இறைநம்பிக்கை, மார்க்கக் கல்வி, ஆட்சியதிகாரம், கண்ணியம் ஆகிய மேம்பாடுகள் அனைத்தும் நபித்தோழர்கள் வழியாக வந்தவையே ஆகும். எனவே, இந்தச் சமுதாயம் நபித்தோழர்களுக்கு மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளது. அவர்களை மதிப்பதும் அவர்களின் சேவைகளைப் போற்றுவதும் முஸ்லிம் சமுதாயத்தின் கடமையாகும். இத்தகைய கண்ணியமிக்க அவர்களை ஏசுவதும் தரக்குறைவாகப் பேசுவதும் ஈமானில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் மறந்துவிடலாகாது. (நஊதுபில்லாஹ்)

ஸஹாபாக்கள் செய்த விசயங்களை வழிகேடான பித்அத் எனவும் அவர்களை பின்பற்றத் தேவையில்லை எனவும் கூறுபவர்கள் யார்? என்பதை பின்வரும் ஹதீது மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

பனீ இஸ்ரவேலர்கள் 72 கூட்டங்களாக பிரிந்து சென்றார்கள். எனது உம்மத்தினர் 73 கூட்டங்களாக பிரிந்து செல்வார்கள். ஒரு கூட்டத்தைத் தவிர அனைவரும் நரகம் செல்வார்கள். அந்தக் கூட்டம் யார்? என ஸஹாபாக்கள் வினவியபோது நானும் எனது தோழர்களும் எந்த அடிப்படைக் கொள்கையில் இருக்கிறோமோ அந்தக் கூட்டம் என ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் பகர்ந்தார்கள். - ஸுனனுத் திர்மிதி 2643.

**அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்பு**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனித உடலமைப்பில் மனிதரைப் போன்று காட்சியளித்தாலும் ஏனைய மனிதர்களுக்கு கொடுக்கப்படாத, சொல்லிலடங்காத பல விசேச சிறப்புக்களை, தன்மைகளை அவர்களுடைய ஒவ்வொரு உறுப்புகளிலும் அல்லாஹுதஆலா ஏற்படுத்தியுள்ளான்.

நபிமார்கள் சாதாரண மனிதர்கள் என்ற கோட்பாட்டை உருவாக்கியவன், அதைப் பின்பற்றியவர்கள் யார்?

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பொதுவாக நபிமார்களை நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களாக சித்தரிக்கும் இந்தக் கோட்பாட்டை முதன் முதலில் இப்லீஸினால்தான் துவக்கி வைக்கப்பட்டது.

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூது செய்யுமாறு அல்லாஹ் விதித்த கட்டளைக்கு மாறு செய்த இப்லீஸ், அதற்கு காரணம் சொல்லும் போது (இந்த) மனிதருக்கு நான் ஸுஜூது செய்ய மாட்டேன் (அல்-குர்ஆன் 15:23) என்றே குறிப்பிட்டான்.

இதை தெளிவுபடுத்துகின்ற இறைமறை அல்-குர்ஆன், இப்லீஸ் உண்டாக்கிய இந்த கோட்பாட்டைப் பின்பற்றி, உலகில் தோன்றிய நபிமார்கள் 'நம்மை போன்ற சாதாரண மனிதர்களே' என்று அந்தந்தக் காலங்களில் வாழ்ந்திருந்த காபிர்கள் சொன்னார்கள் என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

நிச்சயமாக தெளிவான அத்தாட்சிகளுடன் அவர்களுக்காக அனுப்பப்பட்ட (நம்முடைய) தூதர்கள் அவர்களிடம் வந்து கொண்டே இருந்தார்கள். எனினும், அவர்களோ 'நம்மைப் போன்ற ஒரு மனிதரா?' நமக்கு நேரான வழியைக் காட்டிவிடுவார் என்று கூறி அவர்களை நிராகரித்துப் புறக்கணித்து விட்டனர். அல்லாஹ்வும் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. அல்லாஹ் (இவர்களின்பால்) தேவையற்றவனும் புகழுக்குரியோனுமாக இருக்கிறான். (குர்ஆன் 64:5,6)

இப்படிப் பொதுவாகச் சுட்டிக்காட்டும் அல்-குர்ஆன் தனித் தனியாகவும் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

ஆத், தமூத் மற்றும் இவர்களுக்குப் பின் வந்த கூட்டத்தினருக்கு வந்த நபிமார்களை 'நீங்களும் எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களே' என்று அவர்கள் சொன்னார்கள். (அல்-குர்ஆன் 14:10)

'இவர் உங்களைப் போன்ற சாதாரண மனிதரே' என்று நூஹ் நபி அவர்களைக் குறித்து அவர்களது சமூகக் காபிர்கள் சொன்னார்கள். (அல்குர்ஆன் 23:24)

நபி ஹூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களை 'இவர் உங்களைப் போன்று சராசரி மனிதரேயன்றி வேறில்லை' என்றனர். (அல்குர்ஆன் 23:33)

நபி ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை 'நீர் எங்களைப் போன்ற சாதாரண மனிதர்தான்' என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 26:154)

'எங்களைப் போன்ற சாதாரணமான இவ்விரு மனிதர்களையா நாங்கள் ஈமான் கொள்வோம்' என்று ஹழரத் மூஸா, ஹழரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இரு நபிமார்களைக் குறித்து அக்கால காபிர்கள் கூறினார்கள். (அல்-குர்ஆன் 23:47)

நபி ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பற்றி 'நீர் எங்களைப் போன்ற (சாதாரண) மனிதரே' என அக்காலக் காபிர்கள் சொன்னார்கள். –(அல்குர்ஆன் 26:186)

நபிமார்களான ஈஸா அலைஹிஸ்ஸலாம், யஹ்யா அலைஹிஸ்ஸலாம், ஷம்ஊன அலைஹிஸ்ஸலாம் ஆகியோரைக் குறித்து, 'நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்களே' என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 36:15)

இவ்வாறே நமது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை குறித்து மக்கத்துக் காபிர்கள், 'இவர் உங்களைப் போன்ற (சாதாரண) மனிதர்தான்' என்று குறிப்பிட்டனர். (அல்குர்ஆன் 21:3)

இதனடிப்படையில்தான் இஸ்லாத்திலிருந்து பிரிந்த ஒவ்வொரு கூட்டத்தாரும் பல வடிவங்களில் பல கொள்கையுடையவர்களாக இருந்தாலும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தரக்குறைவாக ஒரு சாதாரண மனிதராக எடைபோடும் விசயத்தில் எல்லாக் கூட்டங்களும் ஒரே கொள்கையுடையவர்களாக இருப்பதாக அறிந்து கொள்ள முடிகிறது.

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதரா?**

அல்லாஹுத்தஆலா தனது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிக் கூறும்போது

(நபியே!) நாம் உம்மை உலகத்தார் யாவருக்கும் ஓர் அருளாகவே அனுப்பியிருக்கிறோம். (அல்-அன்பியா 107)

அபூஸயீத் அல் குத்ரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: 'நீங்கள் தொடர் நோன்பு நோற்காதீர்கள். அப்படி உங்களில் யாரேனும் தொடர் நோன்பு நோற்பதாக இருந்தால் ஸஹ்ர் வரை நோற்கட்டும்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் தொடர் நோன்பு நோற்கிறீர்களே! என்று கேட்டனர். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நான் உங்களைப் போன்றவன் அல்லன். எனக்கு உணவளிப்பவனும் புகட்டுபவனும் உள்ள நிலையில் நான் இரவைக் கழிக்கிறேன்' என்றார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 1967, 7242, 1966, 9165, 1964, 1963, 1962, 1961.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வஹியைப் பெற்றதே, அவர்கள் ஏனைய மனிதர்களை விட சிறப்பம்சங்களை கொண்டவர்கள் என்று சொல்வதற்கு போதுமான சான்றாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஒவ்வொரு உறுப்புக்களும், அவர்களின் மேனி எதில் பட்டதோ அதுவனைத்தும் இறையருள் பரகத்து நிறைந்ததாக ஆகிவிடுகிறது. இது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தனிப் பெரும் சிறப்பம்சமாகும்.

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உறுப்புக்களின் சிறப்புகள்.**

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சங்கையான முகத்தின் சிறப்பு**

அபூ இஸ்ஹாக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முகம் வாளைப் போன்று (மின்னிக் கொண்டு நீண்டதாக) இருந்ததா?' என்று பராஉ ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், 'இல்லை. ஆயினும் அவர்களின் முகம் சந்திரனைப் போன்று (பிரகாசமாகவும் வட்டமானதாகவும்) இருந்தது' என்று பதிலளித்தார்கள். -ஸஹீஹுல் புகாரி 3552.

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடம்பின் நறுமணத்தின் சிறப்பு**

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது (உடல்) வாசனையை விட நறுமணமிக்க அம்பரையோ கஸ்தூரியையோ வேறெந்த நறுமணப் பொருளையோ நுகர்ந்ததேயில்லை, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ளங்கையை விட மென்மையான அல ங்காரப் பட்டையோ சாதாரணப் பட்டையோ நான் தொட்டதில்லை. - ஸஹீஹ் முஸ்லிம் 4653

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ளங்கையை விட மென்மையான பட்டையோ, (பூ வேலைப்பாடு செய்யப்பட்ட) தூய்மையான பட்டையோ நான் தொட்டதில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய (உடல்) மணத்தை விட சுகந்தமான ஒரு நறுமணத்தை நான் நுகர்ந்ததேயில்லை. -ஸஹீஹுல் புகாரி 3561.

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வியர்வையின் சிறப்பு**

அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், எங்களது வீட்டிற்கு வந்து மதிய ஓய்வெடுத்தார்கள். அப்போது அவர்கள் உடலில் வியர்வை ஏற்பட்டது. என் தாயார் (உம்மு சுலைம் ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஒரு கண்ணாடிக் குவளையுடன் வந்து வியர்வைத் துளிகளை அந்தக் குவளையில் சேகரிக்கலானார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து, உம்மு சுலைமே! என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார்கள். என் தாயார், இது தங்கள் வியர்வை. இதை எங்கள் நறுமணப் பொருளில் சேர்க்கிறோம். இது நல்ல வாசனைப் பொருட்களில் ஒன்றாகும் என்று சொன்னார்கள். -ஸஹீஹ் முஸ்லிம் 4655.

(4556 வது ஹதீதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீ செய்தது சரிதான் என்று சொன்னதாகவும் இடம்பெற்றுள்ளது.)

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பார்வையின் சிறப்பு**

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்கள் பக்கம் முன்னோக்கி, வரிசைகளை நேராக்குங்கள்! நெருக்கமாக நில்லுங்கள்! ஏனெனில் என் முதுகுக்குப் பின் புறமாகவும் உங்களை நான் காணுகிறேன் என்றார்கள். -ஸஹீஹ் புகாரி 719, 718.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: (தொழுகையில்) ருகூவையும் சஜ்தாவையும் முழுமையாகச் செய்யுங்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! நான் என் முதுகுக்குப் பின்னால் நீங்கள் குனி(ந்து ருகூஉ செய்)யும் போதும் சிரவணக்கம் (சஜ்தா) செய்யும் போதும் உங்களை நான் காண்கிறேன். -ஸஹீஹ் முஸ்லிம் 728, 729, 727.

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உடல் பலத்தின் சிறப்பு**

கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரவில் அல்லது பகலில் தமது மனைவிமார்களிடத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். 'அவர்களுடைய மனைவியர் பதினோரு பேர் இருந்தார்கள்' என அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியபோது நான் அவரிடத்தில், அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சக்தி பெறுவார்களா? என்ற கேட்டேன். அதற்கு 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முப்பது பேர்களுடைய சக்தி கொடுக்கப்பட்டுள்ளது என்று நாங்கள் பேசிக் கொள்வோம்' என அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

மற்றொரு அறிவிப்பில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஒன்பது மனைவியர் இருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. -ஸஹீஹுல் புகாரி 268.

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உறக்கத்தின் சிறப்பு**

அப்துல்லாஹ் இப்னு அபீ நமிர் ரஹ்மத்துல்லாஹி அவர்கள் அறிவிக்கிறார்கள்:

எங்களிடம் அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஅபாவின் பள்ளிவாசலிலிருந்து (விண்ணுலகப் பயணத்திற்காக) அழைத்துச் செல்லப்பட்ட இரவைக் குறித்துப் பேசினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு (மீண்டும்) வஹீ (இறைச் செய்தி) வருவதற்கு முன்னால் அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் தூங்கிக் கொண்டிருந்த போது (வானவர்களில்) மூன்று பேர் அவர்களிடம் வந்தார்கள். அவர்களில் முதலாமவர், இவர்களில் அவர் யார்? என்று கேட்டார். அவர்களில் நடுவிலிருந்தவர், இவர்களில் சிறந்தவர் என்று பதிலளித்தார். அவர்களில் இறுதியானவர்,

இவர்களில் சிறந்தவரை (விண்ணுலகப் பயணத்திற்காக) எடுத்து வாருங்கள் என்று கூறினார். அன்றிரவு இது மட்டும்தான் நடந்தது. அடுத்த இரவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் உள்ளம் பார்க்கிற நிலையில் (உறக்க நிலையில்) அம்மூவரும் வந்த போது தான் அவர்களைக் கண்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கண்கள் இரண்டும் தான் உறங்கும், அவர்களின் உள்ளம் உறங்காது. இறைத் தூதர்கள் இப்படித்தான். அவர்களின் கண்கள் உறங்கும் அவர்களின் உள்ளங்கள் உறங்க மாட்டா. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பொறுப்பேற்று அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு வானத்தில் ஏறிச் சென்றார்கள். -ஸஹீஹ் புகாரி 3570.

**ஆதமின் மக்கள் அனைவருக்கும் தலைவர் (ஸய்யித்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளில் ஆதமின் மக்கள் (மனிதர்கள்) அனைவருக்கும் தலைவன் நானே اَنَا سَيِّدُ முதன் முதலில் மண்ணறை பிளந்து (உயிர்த்து) எழுபவனும் நானே. முதன் முதலில் பரிந்துரை செய்பவனும் நானே. முதன் முதலில் பரிந்துரை ஏற்கப்படுபவனும் நானே. -ஸஹீஹ் முஸ்லிம் 4575.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உடம்பிலிருந்து வெளியானவைகளின் சிறப்பு. அவை இறை அருளைப் (பரக்கத்) பெற்றுத் தரக் கூடியவை.

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முடியின் சிறப்பு**

அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்(துல்ஹஜ் பத்தாவது நாளில்) ஜம்ரத்துல் அகபாவில் கல்லெறிந்து விட்டு பிறகு பலி ஒட்டகத்தை நோக்கிச் சென்று அதை அறுத்தார்கள். நாவிதரும் அங்கே அமர்ந்திருந்தார். அவரிடம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்து தலையைக் கையால் சுட்டிக் காட்டினார்கள். வலப்பக்கத்தை அவர் மழித்ததும் முடியைத் தனது அருகிலிருந்தவர்களிடையே விநியோகிக்கச் செய்தார்கள். பிறகு நாவிதரிடம் 'மறு பக்கத்தை மழி' என்றார்கள். பின்னர் 'அபூதல்ஹா எங்கே?'எ ன்று கேட்டு, (அவர்கள் வந்ததும்) அவர்களிடம் அந்த முடியைக் கொடுத்தார்கள். -ஸஹீஹ் முஸ்லீம் 2512, (2510, 2511, 2513(

உதுமான் பின் அப்துல்லாஹ் பின் மவ்ஹப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய துணைவியார் உம்மு சல்மா ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் என்னை என் குடும்பத்தார் ஒரு தண்ணீர்ப் பாத்திரத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். (உம்மு சலமா ஒரு சிமிழைக் கொண்டு வந்தார்கள்.) அது வெள்ளியால் ஆனதாக இருந்தது. அதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முடிகளில் ஒரு முடி இருந்தது. (பொதுவாக யாரேனும்) ஒருவருக்கு கண்ணேறு அல்லது நோய் ஏற்பட்டுவிட்டால், அவர் தமது நீர் பாத்திரத்தை உம்மு

சலமா ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அனுப்பி வைப்பார். (அவர்கள் தம்மிடமிருந்த நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரக்கத்தான முடியைத் தண்ணீருக்குள் முக்கி அனுப்புவார்கள். அதை நோயாளி குடிப்பார்.) நான் அந்தச் சிமிழை எட்டிப் பார்த்தேன். (அதில்) சில சிவப்பு முடிகளைக் கண்டேன். -ஸஹீஹுல் புகாரி. 5896.

முஹம்மது இப்னு ஸிரீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாவது: அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து அல்லது அவர்களின் குடும்பத்தாரிடமிரு;நது நாங்கள் பெற்ற, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முடி எங்களிடத்தில் உள்ளது என்று அபீதா என்பாரிடம் கூறினோம். அப்போது அவர், 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஒரு முடி என்னிடம் இருப்பது உலகமும் அதில் உள்ளவற்றையும் விட எனக்கு மிக விருப்பமானதாகும் என்று கூறினார்கள். - ஸஹீஹுல் புகாரி 170

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அணிந்த ஆடையின் சிறப்பு**

அஸ்மா ரலியல்லாஹு அன்ஹா 'இது ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் அவர்கள் மறையும் வரை இருந்து வந்தது. அவர்கள் மறைந்த பின்னர் அதை நான் எடுத்து வைத்துக் கொண்டேன். இதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அணிந்து வந்தார்கள். பின்னர் நாங்கள் (அருள்வளம் கருதி) இதைத் தண்ணீரில் கழுவி, அதைக் கொண்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறோம்'என்று கூறினார்கள்.

-ஸஹீஹ் முஸ்லிம் 4201.

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கைப்பட்ட தண்ணீரின் சிறப்பு**

அபூஜுஹைஃபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதனிடப்பட்ட தோலால் ஆன ஒரு சிவப்புக் கூடாரத்தில் இருந்த போது நான் அவர்களிடம் சென்றேன். பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கசுத்தி (உளூ) செய்த தண்ணீரை எடுத்ததை நான் பார்த்தேன். மக்கள் அந்தத் தண்ணீருக்காகப் போட்டியிட்டனர். அதில் சிறிது கிடைக்கப் பெற்றவர் அதை (தமது மேனியில்) தடவிக் கொண்டார். அதிலிருந்து சிறிதும் கிடைக்கப் பெறாதவர் தம் தோழர் கையிலிருந்த ஈரத்தை எடுத்து (தடவி)க் கொண்டார். - ஸஹீஹுல் புகாரி 5859.

அபூ முஸல் அஷ்அரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தண்ணீர் உள்ள ஒரு பாத்திரத்தைக் கொண்டு வரச் சொல்லி அதில் தங்கள் இரு கைகளையும் தங்கள் முகத்தையும் கழுவினார்கள். அதில் தண்ணீரைத் துப்பினார்கள். பின்னர் என்னிடமும் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமும் இதிலிருந்து நீங்கள் இருவரும் குடியுங்கள். உங்கள் முகத்திலும்,

கழுத்திலும் ஊற்றிக் கொள்ளுங்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். - ஸஹீஹுல் புகாரி 188

மற்றோர் அறிவிப்பில் அதிகப்படியாகக் கூறியிருப்பதாவது: (நபிகளாரின் துணைவியார்) உம்மு சலமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் திரைக்குப் பின்னாலிருந்து எங்கள் இருவரையும் அழைத்து, (இறை நம்பிக்கையாளர்களான) உங்களின் அன்னை(யான என)க்காகவும் அதிலிருந்து சிறிது (தண்ணீரை) மீதி வையுங்கள் என்று சொன்னார்கள். அவ்வாறே நாங்கள் இருவரும் அவர்களுக்காக அதில் சிறிது மீதி வைத்தோம். - ஸஹீஹுல் புகாரி 4328.

அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதிகாலைத் தொழுகையை தொழுது முடித்ததும் மதீனாவின் பணியாளர்கள் தண்ணீருள்ள பாத்திரங்களைக் கொண்டு வருவார்கள். கொண்டு வரப்படும் ஒவ்வொரு பாத்திரத்தினுள்ளும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது கையை மூழ்கச் செய்வார்கள். சில வேளைகளில் குளிரான காலை நேரங ;களிலும் அதை கொண்டு வருவார்கள். அப்போதும் அதனுள்ளே கையை மூழ்கச் செய்வார்கள்.

-ஸஹீஹ் முஸ்லீம் 4646

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருந்த போது அஸர் தொழுகை நேரம் வந்து விட்டது. அப்போது மிச்சமிருந்த சிறிதுத் தண்ணீரைத் தவிர வேறு தண்ணீர் எதுவும் எங்களிடம் இருக்கவில்லை. அது ஒரு பாத்திரத்தில் ஊற்றப்பட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொண்டு வரப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதில் தமது கையை நுழைத்துத் தம் விரல்களை விரித்தார்கள். பிறகு அவர்கள், 'அங்கசுத்தி (உளூ) செய்பவர்களே! தண்ணீரிடம் வாருங்கள்! அந்த வளம் (பரக்கத்) அல்லாஹ்விடமிருந்தே கிடைத்ததாகும்' என அழைத்தார்கள். அவர்களுடைய விரல்களுக்கிடையே இருந்து தண்ணீர் பீறிட்டுப் பாய்வதை நான் கண்டேன். மக்கள் (அதில்) அங்கசுத்தி (உளூ) செய்து அதை அருந்தவும் செய்தார்கள். நான் அதை வயிறு நிரம்ப அருந்துவதில் குறை வைக்கவில்லை. ஏனெனில், அது வளம் (பரக்கத்) மிக்கது என நான் அறிந்திருந்தேன்.

-அறிவிப்பாளர் சாலிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்:

நான் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் 'நீங்கள் அன்றைய தினம் எத்தனை பேர் இருந்தீர்கள்?' என்று கேட்க, 'நாங்கள் ஆயிரத்து நானூறு பேர் இருந்தோம்' என்று சொன்னார்கள்.

-ஸஹீஹ் புகாரி 5639, 3576 ஸஹீஹ் முஸ்லீம் 4577, 4578

அபுதர்தா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாவது: நான் மதீனா சென்றிருந்தேன். அங்கு அப்துல்லாஹ் பின் சலாம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். அவர்கள் என்னிடம், 'வீட்டிற்குப் போகலாம் (வாருங்கள்). அல்லாஹ்வின் தூதர்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அருந்திய ஒரு பாத்திரத்தில் உங்களுக்கு நான் அருந்தக் கொடுப்பேன். மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுத பள்ளிவாசலில் நீங்கள் தொழலாம்' என்று சொன்னார்கள். ஆகவே, நான் அவர்களுடன் சென்றேன். அவர்கள் எனக்கு மாவு பானத்தை அருந்தக் கொடுத்தார்கள். பேரீச்சம் பழத்தை உண்ணக் கொடுத்தார்கள். அவர்களது பள்ளிவாசலில் தொழுதேன். -ஸஹீஹ் புகாரி 7342.

எனவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எம்மைப் போன்ற சாதாரண மனிதரல்ல என்பதை நாம் விளங்கிக் கொண்டோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே, நான் உங்களைப் போன்றவரல்ல எனக் கூறியிருக்கும் போது வஹ்ஹாபியிஸத்தைப் பின்பற்றுவோர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதர்தான் எனக் கூறுவது, முஸ்லீம்களை வழி கெடுப்பதற்காக செய்யும் சதி என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசம் கொள்வதின் சிறப்பு**

அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! மறுமை நாள் எப்போது வரும்? என்று கேட்டார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறுமைக்காக நீ என்ன (நற்செயல்களைத்) தயார் செய்து வைத்திருக்கிறாய்?' என்று கேட்டார்கள். அவர், அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் அன்பு கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அப்படியானால் நீ நேசித்தவர்களுடன்தான் (மறுமையில்) நீ இருப்பாய்' என்று சொன்னதைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். இதைப் போன்று நாங்கள் இஸ்லாத்தைத் தழுவியபின் இதைப் போன்று வேறு எதற்காகவும் மகிழ்ச்சியடைந்ததில்லை.

ஆகவே, நான் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அபூபக்கர், உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களையும் நேசிக்கிறேன். மேலும், அவர்களை நேசித்த காரணத்தால் (மறுமையில்) அவர்களுடன்தான் நான் இருப்பேன் என்று நம்புகிறேன். அவர்களுடைய நற்செயல்கள் அளவுக்கு நான் நற்செயல்கள் புரியாவிட்டாலும் சரியே!'

-ஸஹீஹுல் புகாரி 6167, 6171, 7153 ஸஹீஹ் முஸ்லீம் 5141, 5142

அப்துல்லாஹ் பின் ஹிஷாம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருந்து கொண்டிருந்தோம். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உமர் பின் அல்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், 'அல்லாஹ்வின்

தூதரே! என்னைத் தவிரவுள்ள எல்லாவற்றையும் விட நீங்களே எனக்கு மிகவும் பரியமானவர்கள்' என்று சொன்னார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'இல்லை! என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது சத்தியமாக! உம்மை விடவும் நானே உமக்கு மிகவும் பிரியமானவனாக ஆகும் வரை (நீர் உண்மையான இறை நம்பிக்கையாளர் ஆக முடியாது)' என்று கூறினார்கள். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'இப்போது அல்லாஹ்வின் மீதாணையாக! என்னை விடவும் தாங்களே எனக்கு மிகவும் பிரியமானவர்கள்' என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'இப்போதுதான் உமரே! (சரியாகச் சொன்னீர்கள்)' என்று கூறினார்கள். -ஸஹீஹுல் புகாரி 6632.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: 'எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக!, உங்களில் ஒருவருக்கு அவரது தந்தையையும் அவரது மக்களையும் விட நான் மிக்க அன்பானவராக ஆகும் வரை அவர் (உண்மையான) ஈமான் உள்ளவராக மாட்டார்'. -ஸஹீஹுல் புகாரி 14, 15.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: என் சமுதாயத்தாரில் என்னை ஆழமாக நேசிப்போரில் சிலர் எனக்குப் பின் தோன்றுவார்கள். அவர்களில் ஒருவர் என்னைப் பார்க்க வேண்டுமென்பதற்காக தம் குடும்பத்தாரையும் செல்வத்தையும் கூடத் தியாகம் செய்ய விரும்புவார். -ஸஹீஹ் முஸ்லீம் 5447

**ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விட்டுச் சென்ற குர்ஆனும், அவர்களது குடும்பமும்**

யஜீத் பின் ஹய்யான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நானும் ஹுஸைன் பின் சப்ரா ரஹிமஹுல்லாஹு அன்ஹு உமர் பின் முஸ்லிம் ரஹிமஹுல்லாஹு ஆகியோரும் ஜைத் பின் அர்கம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்றோம். நாங்கள் அவர்கள் அருகில் அமர்ந்த போது, அவர்களிடம், ஹுஸைன் பின் சப்ரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'ஜைத் அவர்களே! தாங்கள் பல்வேறு நன்மைகளைச் சந்தித்துள்ளீர்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டுள்ளீர்கள். அவர்களிடமிருந்து ஹதீதுகளைக் கேட்டுள்ளீர்கள். அவர்களுடன் சேர்ந்து அறப்போரில் கலந்து கொண்டுள்ளீர்கள். அவர்களுக்குப் பின்னால் தொழுதுள்ளீர்கள். ஜைதே! தாங்கள் பல்வேறு நன்மைகளை சந்தித்துள்ளீர்கள். ஜைதே! தாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து செவியுற்ற ஹதீதை எங்களுக்கு அறிவியுங்கள்' என்று கேட்டார்கள்.

அதற்கு ஜைத் பின் அர்கம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'என் சகோதரர் புதல்வரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு வயது அதிகமாகிவிட்டது. எனது காலம் கழிந்து விட்டது. அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து நான் மனனமிட்ட சில ஹதீதுகளை நான் மறந்து விட்டேன். ஆகவே, நான் உங்களுக்கு

அறிவிப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் அறிவிக்காதவற்றைப் பற்றி என்னிடம் கேட்டு என்னை சிரமப்படுத்தாதீர்கள்' என்று கூறிவிட்டுப் பின்வருமாறு சொன்னார்கள்:

ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள 'கும்மு' எனும் நீர் நிலையருகே எங்களிடையே நின்று உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து, (இறைவனையும், இறுதி நாளையும்) நினைவூட்டி அறிவுரை கூறினார்கள். பிறகு, 'இறை வாழ்த்துக்குப் பின், மக்களே! கவனியுங்கள். நானும் ஒரு மனிதனே. (என் உயிரைக் கைப்பற்றும்) என் இறைவனின் தூது வரும் காலம் நெருங்கிவிட்டது. அவனது அழைப்பை நான் ஏற்றுக் கொள்வேன். நான் உங்களிடையே கனமான இரண்டு பொருட்களை விட்டுச் செல்கிறேன். அவற்றில் ஒன்று (அல்குர்ஆன்) அல்லாஹ்வின் வேதமாகும். அதில் நல்வழியும் பேரொளியும் உள்ளது. ஆகவே, அல்லாஹ்வின் வேதத்தை ஏற்று அதைப் பலமாக பற்றிக் கொள்ளுங்கள்' என்று கூறி, அல்லாஹ்வின் வேதத்தின்படி வாழுமாறு தூண்டினார்கள், அதில் ஆர்வமும் ஊட்டினார்கள்.

பிறகு, '(மற்றொன்று) என் குடும்பத்தார் ஆவர். என் குடும்பத்தார் விஷயத்தில் (அவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் பேணுமாறு) உங்களுக்கு நான் அல்லாஹ்வின் பெயரால் நினைவூட்டுகிறேன். என் குடும்பத்தார் விஷயத்தில் (அவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் பேணுமாறு) உங்களுக்கு நான் அல்லாஹ்வின் பெயரால் நினைவூட்டுகிறேன். என் குடும்பத்தார் விஷயத்தில் (அவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் பேணுமாறு) உங்களுக்கு நான் அல்லாஹ்வின் பெயரால் நினைவூட்டுகிறேன்' என்று (மூன்று முறை) கூறினார்கள்.

அப்போது ஜைத் பின் அர்கம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஹுஸைன் பின் சப்ரா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், 'ஜைதே! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய குடும்பத்தார் யார்? நபியவர்களின் துணைவியர் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையா?' என்று கேட்டார்கள்.

அதற்கு ஜைத் பின் அர்கம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'நபியவர்களின் துணைவியரும் அவர்களின் குடும்பத்தாரில் அடங்குவர். ஆயினும், நபியவர்களுக்குப் பின் யாருக்கு தர்மம் கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளதோ அவர்களே அவர்களுடைய குடும்பத்தார் ஆவர்' என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸைன் பின் சப்ரா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் 'அவர்கள் யார்?' என்று கேட்டார்கள். அதற்கு ஜைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'அலி பின் அபீதாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் குடும்பத்தாரும், அகீல் பின் அபீதாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் குடும்பத்தாரும், ஜஃபர் பின் அபீதாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் குடும்பத்தாரும், அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் குடும்பத்தாருமே (நபியவர்களின் குடும்பத்தார் ஆவர்)' என்று பதிலளித்தார்கள்.

ஹுஸைன் பின் சப்ரா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், 'தர்மம் பெறுவது இவர்கள் அனைவருக்கும் தடை செய்யப்பட்டுள்ளதா?' என்று கேட்டார்கள். அதற்கு ஜைத் பின் அர்கம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், 'ஆம்' என்று பதிலளித்தார்கள்.

மேற்கண்ட ஹதீது ஸைத் பின் அர்கம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்தே மேலும் இரு அறிவிப்பாளர் தொடர்கள் வழியாகவும் வந்துள்ளது. -ஸஹீஹ் முஸ்லீம் 4782, 4783.

**முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தார்**

சஅத் பின் அபீவக்காஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலி, பாத்திமா, ஹஸன், ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோரை அழைத்து இறைவா! இவர்கள்தான் என் குடும்பத்தார் என்று கூறினார்கள்.

-ஸஹீஹ் முஸ்லிம் 4778

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியதாவது:

ஒரு நாள் காலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒட்டகச் சேனத்தின் உருவம் பொதிக்கப்பட்ட கறுப்பு நிற கம்பளிப் போர்வை அணிந்து கொண்டு புறப்பட்டார்கள். அப்போது (அவர்களுடைய பேரர்) ஹஸன் பின் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்தார்கள். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை (தமது போர்வைக்குள்) நுழைத்துக் கொண்டார்கள். பிறகு ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்தபோது அவர்களையும் (போர்வைக்குள்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நுழைத்துக் கொண்டார்கள். பிறகு (மகள்) பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வந்தபோது, அவர்களையும் (போர்வைக்குள்) நுழைத்துக் கொண்டார்கள். பிறகு (மருமகனும் தமது வீட்டில் வளர்ந்தவருமான) அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்தபோது அவர்களையும் போர்வைக்குள் நுழைத்துக் கொண்டார்கள். பிறகு, 'இவ்வீட்டாராகிய உங்களை விட்டு அசுத்தத்தை நீக்கவும் உங்களை முழுமையாகப் பரிசுத்தப்படுத்தவுமே அல்லாஹ் விரும்புகிறான்' (33:33) எனும் இறைவசனத்தை ஓதிக் காட்டினார்கள். -ஸஹீஹ் முஸ்லிம் 4807

அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்தார்கள்: முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தார் விஷயத்தில் கவனமாக நடந்து கொள்ளுங்கள். (அவர்களைப் பாதுகாத்து வாருங்கள். அவர்களுக்குத் துன்பம் கொடுக்காதீர்கள்.) -ஸஹீஹுல் புகாரி 3713.

**சிறந்த தலைமுறையில் தோன்றியவர்களே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஆதமின் சந்ததிகளில் தலைமுறை தலைமுறையாக நான் சிறந்த தலைமுறை வழியே (மரபணுக்களில் பாதுகாக்கப்பட்டு வந்து இப்போது) நான் தோன்றியிருக்கும் (இந்தச்) சிறந்த தலைமுறையில் தோன்றி இறைத்தூதராகக்கப்பட்டுள்ளேன். -ஸஹீஹுல் புகாரி 3557

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நான் இம்மையிலும் மறுமையிலும் மர்யமின் மைந்தர் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மக்களிலேயே மிகவும் நெருக்கமானவன் ஆவேன் என்று கூறினார்கள்.

அப்போது 'அது எப்படி அல்லாஹ்வின் தூதரே? என்று மக்கள் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபிமார்களின் அன்னையர் (வேறுபட்ட) பலராய் இருந்தாலும் அவர்கள் அனைவரும் தந்தை வழிச் சகோதரர்கள் ஆவர். அவர்கள் அனைவரது மார்க்கமும் ஒன்றே. எங்கள் (இருவர்) இடையே எந்த இறைத்தூதரும் இல்லை என்று சொன்னார்கள். -ஸஹீஹ் முஸ்லிம் 4717.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் கவி (புகழ்) பாடுவது

**பிறரால் பாடப்பட்ட கவிதைகளைப் பாடக் கேட்க விரும்பிய அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

ஷரீத் பின் சுவைத் அஸ்ஸகஃபீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: ஒரு நாள் நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னால் (அவர்களது வாகனத்தில்) அமர்ந்திருந்தேன். அப்போது அவர்கள், 'உமைய்யா பின் அபிஸ்ஸல்த்தின் கவிதைகளில் ஏதேனும் உமக்குத் தெரியுமா?' என்று கேட்டார்கள். நான் 'ஆம்' (தெரியும்), என்றேன். 'பாடு' என்றார்கள். உடனே நான் ஒரு பாடலைப் பாடினேன். இன்னும் பாடு என்றார்கள். பிறகு இன்னொரு பாடலைப் பாடினேன். இன்னும் பாடு என்றார்கள். இவ்வாறே அல்லாஹ்வின் தூதருக்காக நூறு (100) பாடல்களைப் பாடிக் காட்டினேன். -ஸஹீஹ் முஸ்லிம் 4540

**மற்றவர்களின் கவிதைகளை பாடிய அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

பராஉ பின் ஆஸிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அகழ்ப்போரின் போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அகழ் தோண்டினார்கள். அப்போது அவர்கள் மண்ணைச் சுமந்து எடுத்துச் சென்று கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அவர்களது வயிற்றின் தோலை என்னை விட்டும் மண் மறைத்து விட்டிருந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிறைய உரோமம் உடையவர்களாக இருந்தார்கள். அப்போது அவர்கள் மண் சுமந்துகொண்டே இப்னு ரவாஹா அவர்களின் யாப்பு வகை (ப்பாடல்) வரிகளைப் பாடிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன்...

-ஸஹீஹுல் புகாரி 4106, ஸஹீஹ் முஸ்லிம் 3688, 3689, 3690, 3691, 3692, 3693.

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பாராட்டிப் புகழ் பாடிய நபித்தோழர்**

ஹைஸம் பின் அபீசிவான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாவது: அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது பேச்சிக்கிடையே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். (அப்போது) உங்கள் சகோதரர் (கவிஞர்) அப்துல்லாஹ் பின் ரவாஹா ரலிய்லலாஹு அன்ஹு அவர்கள் தவறானவற்றைக் கூறுபவர் அல்லர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பாராட்டி பின்வருமாறு) அவர் பாடினார் என்றார்கள்:

எங்களிடையே அல்லாஹ்வின் தூதர் இருக்கிறார்கள்

வைகறைப் பொழுது புலரும் நேரத்தில்

அவர்கள் இறைவேதத்தை ஓதுகிறார்கள்

குருட்டுத்தனத்தில் இருந்த எங்களுக்கு

அவர்கள் நேர்வழி காண்பித்தார்கள்

அவர்கள் கூறியது நிச்சயம் நிகழும் என

எங்கள் உள்ளங்கள் உறுதியாக நம்புகின்றன

இரவில் இணைவைப்பாளர்கள் படுக்கையில்

அழுந்திக் கிடக்கும் போது இவர்கள்

படுக்கையிலிருந்து எழுந்து தொழுவார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 6151, 1155.

**பள்ளிவாசலில் கவிபாடுவதை அனுமதித்த அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

ஸயீத் பின் முஸய்யப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாவது: மஸ்ஜிதுன் நபவியில் (நபித்தோழரும் கவிஞருமான) ஹஸ்ஸான் பின் தாபித் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் கவிபாடிக் கொண்டிருக்க, உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அங்கு வந்தார்கள். (ஹஸ்ஸான் பின் தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பள்ளிவாசலில் கவி பாடுவதை உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டித்தார்கள்.) ஹஸ்ஸான் பின் தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், .நான் இந்தப் பள்ளிவாசலில் (மஸ்ஜிதுன் நபவியில்) உங்களை விடச் சிறந்தவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) இருக்கும்போதே கவி பாடிக் கொண்டிருந்தேன் என்று கூறிவிட்டு, அபூஹுரைரா ரலியல்லாஹு

அன்ஹு அவர்கள் பக்கம் திரும்பி, அல்லாஹ்வின் பெயரால் உங்களிடம் கேட்கிறேன். (என்னிடம்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், (ஹஸ்ஸானே!) என் சார்பாக (எதிரிகளின் வசைக் கவிகளுக்கு) நீங்கள் (கவிகளாலேயே) பதிலளியுங்கள். இறைவா! ஹஸ்ஸானுக்கு ரூஹுல் குதுஸ், (தூய ஆத்மா வானவர் ஜிப்ரயீல் அவர்களின்) மூலம் துணை புரிவானாக! என்று கூறியதை நீங்கள் செவியுற்றிருக்கிறீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆம் (செவியுற்றிருக்கிறேன்) என்று பதிலளித்தார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 3212, ஸஹீஹ் முஸ்லிம் 4897

**மரணித்தவர்களை நினைவு கூர்ந்து பாடுவது**

ருபய்யிஉ பின்த் முஅவ்வித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: எனக்கு திருமணம் நடந்த அன்று காலை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் வந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனது விரிப்பின் மீது அமர்ந்தார்கள். அங்கு சில (முஸ்லிம்) சிறுமிகள் (சலங்கையில்லா) கஞ்சிராக்களை அடித்துக் கொண்டு பத்ருப் போரில் கொல்லப்பட்ட தங்கள் முன்னோர்களைப் புகழ்ந்து (இரங்கல்) பாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒரு சிறுமி, எங்களிடையே ஓர் இறைத்தூதர் இருக்கிறார். அவர் நாளை நடப்பதையும், நடக்கவிருப்பதையும் அறிவார் என்று கூறினாள். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இப்படிச் சொல்லாதே. (இதை விடுத்து) முன்பு நீ சொல்லிக் கொண்டிருந்ததை (வேண்டுமானால்) சொல்' என்று கூறினார். -ஸஹீஹுல் புகாரி 4001.

இறந்து விட்ட ஒருவருக்காக அவரை நினைவு கூர்ந்து செய்யப்படும் தானதர்மங்களின் நன்மை அவரைச் சென்றடையும்.

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: கதிஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் மீது நான் ரோசப்பட்டதைப் போல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வேறெந்த மனைவியின் மீதும் ரோசப்பட்டதில்லை. ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரை அதிகமாக நினைவு கூர்ந்து (புகழ்ந்து பேசி) வந்தார்கள். அவர்கள் சில வேளைகளில் ஆட்டை அறுத்து அதைப் பல துண்டுகளாகப் பிரித்து, பிறகு அதை கதீஜாவின் தோழிகளிடையே (பங்கிட) அனுப்பி விடுவார்கள். சில வேளைகளில் நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், உலகில் கதீஜாவைத் தவிர வேறெந்தப் பெண்ணும் இல்லாததைப் போல் நடந்து கொள்கிறீர்களே என்று கேட்டதுண்டு. அப்போது அவர்கள், அவர் (புத்திசாலியாக) இருந்தார். (சிறந்த குணமுடையவராக) இருந்தார். (இப்படி, இப்படியெல்லாம் இருந்தார்). மேலும், எனக்கு அவர் வாயிலாகத்தான் பிள்ளைச் செல்வம் கிடைத்தது என்று பதில் சொன்னார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 3818, 3817, 3816, 6004. ஸஹீஹ் முஸ்லீம் -4820, 4821.

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் 'என் தந்தை சொத்துகளை விட்டு விட்டு இறந்து போனார். அவர் இறுதி விருப்பம் எதுவும் தெரிவிக்கவும் இல்லை. இந்நிலையில் அவருக்காக நான் தர்மம் செய்தால், அவருக்கு அது பரிகாரம் ஆகுமா?' என்று கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஆம்' என்றார்கள்.

-ஸஹீஹ் முஸ்லீம் 3355

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் 'என் தாயார் திடீரென இறந்து விட்டார். அவர் (இறப்பதற்கு முன்பு) பேச முடிந்திருந்தால், தர்மம் செய்(யச் சொல்லியிருந்)திருப்பார் என்று நான் கருதுகிறேன். அவருக்காக நான் தர்மம் செய்தால் எனக்கு நன்மை உ ண்டா?' என்று கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஆம்' என்று விடையளித்தார்கள்.

-ஸஹீஹ் முஸ்லீம் 3356, 1830 ஸஹீஹுல் புகாரி 1388, 2760.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: எல்லா நல்லறமும் தர்மமே. (குல்லு மஃபிருன் ஸதகா)

-ஸஹீஹுல் புகாரி 6021, ஸஹீஹ் முஸ்லீம் 1831.

**மறைவானவற்றின் அறிவு கொடுக்கப்பட்ட மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

மறைவானவற்றின் அறிவு அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு. (வேறு யாருக்கும் கிடையாது) என்பதில் சுன்னத் வல் ஜமாஅத்தினரிடம் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால் மறைவானவைகளில் சிலவற்றின் அறிவை அல்லாஹுத்தஆலா தனது ரஸூல்மார்களுக்கும் கொடுப்பதாக திருமறையில் கூறிக் காட்டுகிறான்.

அல்லாஹ், தனது மறைவானவற்றை உங்களுக்கு காண்பிப்பதற்காக (எந்தத் தேவையும்) இல்லை. என்றாலும் அல்லாஹ், தனது ரஸூல்மார்களிலிருந்து தான் நாடியவர்களை (அதற்காகத்) தேர்ந்து கொள்கின்றான். (ஆல இம்ரான் 179)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சில மறைவான விசயங்களை சொல்லிக் கொடுத்ததாக பின்வரும் வசனம் சொல்லிக் காட்டுகிறது.

நபியே அது மறைவானவற்றின் செய்திகளில் நின்றுமுள்ளவையாகும். அதனை உங்களுக்கு நாம் வஹி மூலம் அறிவிக்கின்றோம். (ஆல இம்ரான் 44)

இவ்வாறே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களுக்கு மறைவான அறிவு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உணர்த்திக் காட்டிய ஹதீதுகளைப் பார்ப்போம்.

அபூ ஸைத் அம்ர் பின் அக்தப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: (ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு 'ஃபஜ்ர்' தொழுகை தொழுவித்து விட்டு, சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீதேறி எங்களுக்கு உரையாற்றினார்கள். இறுதியில் லுஹர் தொழுகை நேரம் வந்த போது (மேடையிலிருந்து) இறங்கி, தொழுதுவிட்டுப் பிறகு மீண்டும் மேடைமீதேறி 'அஸர்' தொழுகை வரை உரையாற்றினார்கள். பிறகு மேடையிலிருந்து இறங்கி ( அஸர் தொழுகை) தொழுதுவிட்டு பிறகு மறுபடியும் மேடை மீதேறி சூரியன் மறையும் வரை உரையாற்றினார்கள். நடந்தவை, நடக்கவிருப்பவை அனைத்தையும் பற்றி (அன்று) எங்களுக்குத் தெரிவித்தார்கள். எங்களில் நன்கறிந்தவர் (அவற்றை) நன்கு மனனமிட்டவர் ஆவார். -ஸஹீஹ் முஸ்லீம் 5544.

உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஒரு முறை) எங்களிடையே மிம்பரில் எழுந்து நின்று, படைப்பின் ஆரம்பத்தைக் குறித்து எங்களுக்குச் செய்தி அறிவித்தார்கள். (எதுவரை என்றால் படைப்பின் தொடக்கம் முதல் மறுமை வாழ்வு வரை) சொர்க்கவாசிகள் (சொர்க்கத்தில்) தாம் தங்குமிடங்களில் புகும் வரையும் நரகவாசிகள் (நரகத்தில்) தாம் தங்குமிடங்களில் புகும் வரையும் அறிவித்தார்கள். அதை நினைவில் வைத்தவர்கள் நினைவில் வைத்துக் கொண்டார்கள். அதை மறந்தவர்கள் மறந்து விட்டார்கள்.

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (சொர்க்கவாசிகள் மற்றும் நரகவாசிகளின் நிலை குறித்துப் பின்வருமாறு கூறினார்கள்: நரகவாசிகளில் இறுதியாக நரகத்திலிருந்து வெளியேறுபவர் யார் என்பதையும், சொர்க்கவாசிகளில் இறுதியாக சொர்க்கத்தில் நுழைபவர் யார் என்பதையும் நான் நன்கறிவேன்.

-ஸஹீஹ் முஸ்லீம் 308, 309

**மறைவானவற்றைக் கற்றுக் கொடுத்த அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து (கற்ற) இரண்டு வகையான (கல்விப்) பாத்திரங்களை நான் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அவற்றில் ஒன்றை நான் (மக்களிடம்) பரப்பி விட்டேன். இன்னொன்றை நான் பரப்பியிருந்தால் என் அடித்தொண்டை வெட்டப்பட்டிருக்கும் எனக் கூறினார்கள். -ஸஹீஹுல் புகாரி 120.

**நாளை நடப்பதை அறிவிக்கும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்**

அபூதர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (எங்களிடம்), 'நீங்கள் விரைவில் ஒரு நாட்டை வெற்றிக் கொள்வீர்கள். அங்கு 'கீராத்' என்னும் சொல்லே ஆளப்படும். அந்நாட்டவரின் நலன் காக்குமாறு நான் கூறும் அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், அவர்களுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அவர்களுடன் நமக்கு உறவு (முறையு)ம் உண்டு. அவர்களில் இருவர் ஒரு செங்கல் அளவு நிலத்துக்காகச் சண்டையிட்டுக் கொள்வதைக் கண்டால் அங்கிருந்து நீங்கள் வெளியேறிவிடுவீர்கள்' என்று சொன்னார்கள்.

இதன் அறிவிப்பாளர் அப்துர் ரஹ்மான் பின் ஷுமாஸா அல்மஹ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு அபூதர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷுரஹ்பீல் பின் ஹசனாவின் புதல்வர்களான ரபீஆவும் அப்திர் ரஹ்மானும் ஒரு செங்கல் அளவு நிலத்துக்காகச் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டபோது அங்கிருந்து புறப்பட்டு விட்டார்கள். -ஸஹீஹ் முஸ்லீம் 4972, 4973.

ஸஹ்ல் இப்னு ஸஅத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கைபர் நாளில் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கின்ற, மேலும், அல்லாஹ்வினுடையவும் அவனுடைய தூதருடையவும் நேசத்தைப் பெற்ற ஒரு மனிதரிடம், நாளை (இஸ்லாமிய சேனையின்) இந்தக் கொடியைத் தரப் போகிறேன். அல்லாஹ் அவருக்கு வெற்றியளிப்பான் என்று கூறினார்கள். அந்தக் கொடி தங்களில் எவரிடம் தரப்படும் என்ற யோசனையில் மக்கள் அந்த இரவெல்லாம் மூழ்கியிருந்தனர். மறுநாள் காலையில் அவர்களில் ஒவ்வொருவரும் அது தம்மிடமே தரப்படவேண்டுமென்று ஆசைப்பட்டவர்களாக, இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தனர். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அலீ இப்னு அபீதாலிப் எங்கே? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவருக்கு கண்வலி ஏற்பட்டுள்ளது' என்று கூறப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், (அவரை அழைத்து வரும்படி) அவரிடம் ஆளனுப்புங்கள்' என்று கூறினார்கள். அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அழைத்து வரப்பட்டபோது அவர்களின் கண்களில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது உமிழ் நீரை உமிழ்ந்து அவருக்காக பிரார்த்தித்தார்கள். உடனே அன்னாரது கண், அதற்கு முன்பு வலி எதுவுமே இல்லாதிருந்ததைப் போல் குணமாகி விட்டது. அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அந்தக் கொடியைக் கொடுத்தார்கள். உடனே அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நம்மைப் போன்று அவர்களும் (ஒரே இறைவனுக்குக் கீழ்படிந்தவர்களாய்) ஆகும் வரை நான் அவர்களுடன் போரிடட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நிதானமாகச் சென்று, அவர்களின் களத்தில் இறங்குங்கள். பிறகு, அவர்களை இஸ்லாத்திற்கு அழைத்து( அதை ஏற்கும் பட்சத்தில்) அவர்களின் மீது கடமையாகின்ற, அல்லாஹ்விற்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களுக்கு எடுத்துச்

சொல்லுங்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களின் மூலம் ஒரேயொருவருக்கு அல்லாஹ் நேர்வழியளிப்பது (அரபுகளின் உயரிய செல்வமான) சிவப்பு ஒட்டகங்களை (சொந்தமாக்கிக் கொள்வதை) விட உங்களுக்குச் சிறந்ததாகும்' என்று கூறினார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 4210, ஸஹீஹ் முஸ்லிம் 4781

**மரணத்தின் பின்னும் உயிர் வாழும் நபிமார்கள், நல்லடியார்களின் நிலை!**

**மரணத்தின் பின்பும் உரையாடும் நபிமார்கள்**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் சந்தித்துக் கொண்டனர். அப்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம், 'நீங்கள் தாம் மக்களைத் துர்பாக்கியவான்களாக்கி, அவர்களை சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றியவரா?' என்று கேட்டார்கள். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம், அல்லாஹ் தன் தூதர் பதவிக்காகவும், தனக்காகவும் தேர்ந்தெடுத்துக் கொண்டு தவ்ராத்தையும் அருளினானே அவரா நீங்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், 'ஆம்' என்று பதிலளித்தார்கள். அதற்கு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'என்னைப் படைப்பதற்கு முன்பாகவே (நீங்கள்; குறிப்பிட்டபடி நான் செய்வேன் என) என் மீது விதிக்கப்பட்டிருந்ததாக, தவ்ராத்தில் நீங்கள் கண்டீர்களா?' என்று கேட்டார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், 'ஆம்' (கண்டேன்) என்றார்கள். இப்படி (ப் பேசி) மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் (வாதத்தில்) வென்றார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 4736, 4738, 6614. ஸஹீஹ் முஸ்லிம் 5157, (5158, 5159)

**மரணத்தின் பின்பு இறைவணக்கம் (அமல்) செய்யும் நபிமார்கள்.**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: நான் (மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸிற்கு) அழைத்துச் செல்லப்பட்ட இரவில் செம்மணற்குன்றின் அருகில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சென்றேன். அப்போது அவர்கள் தமது அடக்கஸ்தலத்தினுள் நின்று தொழுது கொண்டிருந்தார்கள். -ஸஹீஹ் முஸ்லீம் 4736, 4737.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், '(இறைத்தூதர்) இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் (எத்தகைய) உருவ அமைப்பில் இருந்தார்கள் என்று அறியவேண்டுமென்றால் உங்கள் தோழரைப்(என்னைப்) பாருங்கள். மூஸா (அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எத்தகையவர் என்றால்) அவர்கள் பழுப்பு நிறமுடையவர்கள், சுருள் முடி கொண்டவர்கள், ஈச்ச மர நாரினால் மூக்கணாங் கயிறு இடப்பட்ட சிவப்பு ஒட்டகம் ஒன்றின் மீது பயணம் செய்தபடி இருப்பார்கள். அவர்கள் (ஹஜ் செய்ய) 'தல்பியா' கூறியபடி

(அல் அஸ்ரக் என்னும்) பள்ளத்தாக்கில் இறங்கிய போது (அவர்களைக் கண்டேன். அந்தக் காட்சியை) நான் (இப்போதும்) பார்ப்பது போன்று உள்ளது' என்று சொன்னார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 5913, 1555, 3355

**கப்ரிலும் பாதுகாக்கப்படும் நல்லடியார்களின் உடல்**

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: உஹதுப் போர் நடக்க விருந்தபோது எனது தந்தை அன்றிரவு என்னை அழைத்து, 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சகாக்களில் (நாளைய போரில்) முதலில் நான் தான் கொல்லப்படுவேன் எனக் கருதுகின்றேன். மேலும் எனக்குப் பின் என்னால் விட்டு செ;லலப்படுபவர்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர மற்றவர்களில் என்னைத் தவிர வேறு யாரையும் நான் மதிப்பிற்குரியவராகக் கருதவில்லை. என் மீது கடன் உள்ளது. அதை நீ அடைப்பதுடன் உனது சகோதரிகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்' என்றார். மறுநாள் (போரில்) அவர்தான் முதலில் கொல்லப்பட்டார். அவருடன் இன்னொருவரும் அடக்கம் செய்யப்பட்டார். இன்னொருவருடன் அவரை கப்ரில் விட்டு வைப்பதை எனது மனம் விரும்பவில்லை. எனவே (அடக்கப்பட்ட) ஆறு மாதங்களுக்குப் பின்பு அவரது உடலை நான் கப்ரிலிருந்து வெளியிலெடுத்தேன். அப்போது அன்றுதான் சற்று முன்னர் அடக்கம் செய்யப்பட்டவர் போல அவரது காதைத் தவிர உடம்பு அப்படியே இருந்தது.

-ஸஹீஹுல் புகாரி 1351.

....வலீத் பின் அப்தில் மலிக்கின் (ஆட்சிக்) காலத்தின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட அறையின் ஒரு சுவர் இடிந்து விழுந்தது. அதைப் புணர்நிர்மாணம் செய்வதில் மக்கள் ஈடுபட்டபோது ஒரு பாதம் வெளியில் தெரிந்தது. உடனே மக்கள் பதறிப்போய் அது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதமாக இருக்குமோ என நினைத்தனர். இதுபற்றித் தெரிந்தவர் யாருமில்லாதிருந்த சமயத்தில் நான் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! இதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதமே இல்லை. மாறாக, இது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பாதமாகும் என்றேன்' என உர்வா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

-ஸஹீஹுல் புகாரி 1390.

**மரணித்தவர்கள் செவியேற்றல்**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: இறந்தவரை மண்ணறைக்குள் வைத்து (அடக்கம் செய்து) விட்டு மக்கள் திரும்பிச் செல்லும்போது, அவர்களின் காலணி ஓசையை இறந்தவர்கள் செவியேற்பர். - ஸஹீஹ் முஸ்லீம் 5506, 5505.

மேற்கண்ட ஹதீதுகளிலிருந்து பின்வரும் விசயங்கள் தெளிவாகிறது

1. அல்லாஹ்வின் நல்லடியார்கள் வபாத்துக்குப் பின் உயிர் வாழ்கிறார்கள்.

2. அல்லாஹ்வின் நல்லடியார்கள் வபாத்துக்குப் பின் அமல் செய்கிறார்கள்.

3. வபாத்தான அல்லாஹ்வின் நல்லடியார்கள் நாடிய இடங்களுக்கு செல்கிறார்கள்.

4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சாதாரண மனிதர்களால் காண முடியாதவற்றைக் காணும் (மனித சக்திக்கு அப்பாற்பட்ட) ஆற்றலும் உண்டு.

5. வபாத்தின் மூலம் ஒட்டு மொத்த துண்டிப்பு ஏற்படாது.

**இரு கரங்களைப் பற்றி முஸாபஹா செய்வது**

ஹம்மாத் பின் ஜைத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அப்துல்லாஹ் பின் முபாரக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் இரு கரங்களைப் பற்றி முஸாபஹா செய்தார்கள்.

-ஸஹீஹுல் புகாரி அத்தியாயம் 79 பாடம் 2

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையில் இரு கரங்களைப் பற்றுவது**

இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இரு கைகளுக்கு இடையே என் கை இருந்த நிலையில், குர்ஆனின் அத்தியாயத்தைக் கற்றுத் தருவதை போன்று (தொழுகையின் இருப்பில் ஓதப்படும்) தஹிய்ய(த் எனும் அத்தஹிய்யாத்)தை எனக்கு அவர்கள் கற்றுத் தந்தார்கள். -ஸஹீஹுல் புகாரி 6265

அபூ ஜுஹைபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஹஜ்ஜின் போது ஒரு நாள்) நண்பகல் நேரத்தில் கடும் வெயிலில் பத்ஹாவை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்போது அவர்கள் உளு செய்து விட்டு ளுஹர் இரண்டு ரக்அத்துகள், அஸர் இரண்டு ரக்கத்துகள் தொழுதார்கள். அப்போது அவர்களுக்கு முன்னால் சிறு ஈட்டி ஒன்று (நடப்பட்டு) இருந்தது. அந்த ஈட்டிக்கு அப்பால் பெண்கள் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். மக்கள் அப்போது எழுந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்; இரு கரங்களையும் பிடித்து அவற்றால் தங்கள் முகங்களை தடவிக் கொள்ளலாயினர். நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கரத்தை எடுத்து என் முகத்தின் மீது வைத்துக் கொண் டேன். அது பனிக்கட்டியை விடவும் குளிர்ச்சியானதாகவும் கஸ்தூரியை விடவும் நறுமணம் மிக்கதாகவும் இருந்தது.

-ஸஹீஹுல் புகாரி 3553.

**குனூத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் இருந்ததா?**

ஆஸிம் அல் அஹ்வல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் தொழுகையில் குனூத் (என்னும் சிறப்பு துஆ நபிகளார் காலத்தில் இருந்ததா என்பது) குறித்துக் கேட்டேன். அதற்கு அவர்கள், ஆம் என்று பதிலளித்தார்கள். உடனே நான், 'ருகூவிற்கு முன்பா? அல்லது பின்பா?' என்று கேட்டேன்.அதற்கு அவர்கள், ருகூவிற்கு முன்புதான்' என்று பதிலளித்தார்கள். உடனே நான், 'தாங்கள் ருகூவிற்குப் பின்னால் தான் என்று சொன்னதாக இன்னார் எனக்கு தெரிவித்தாரே' என்று கேட்டேன். அதற்கு 'அவர் தவறாகக் கூறியிருக்கிறார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ருகூவிற்குப் பிறகு(ம் கூட) ஒரு மாத காலம் தான் குனூத் ஓதினார்கள். (அது எப்போது நடந்ததென்றால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குர்ரா-திருக்குர்ஆனை நன்கறிந்தவாகள் என்று கூறப்பட்டு வந்த சிலரை – அவர்கள் எழுபதுபேர் ஆவர் - இணைவைப்பவர்கள் சிலரிடம் அனுப்பி வைத்தார்கள். இவர்களது தரப்பிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் இவர்களுக்கும் இடையே (பரஸ்பரப் பாதுகாப்பு) ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. (இவ்வாறு) அல்லாஹ்வின் தூதருடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த இவர்களது கையோங்கி (அந்த 70 பேர்களையும் கொன்று) விட்டனர். எனவேதான், அவர்களுக்கெதிராக ஒரு மாத காலம் ருகூவிற்குப் பின்பு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'குனூத்' ஓதினார்கள்' என்று அனஸ் ரலியல்லாஹு அன்ஹுஅவர்கள் பதிலளித்தார்கள்.

- ஸஹீஹுல் புகாரி 4096, 1002.

இந்த ஹதீதுக்கு விளக்கமளிக்கும் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்:

தேவைக்காக ஓதப்படும் குனூத் ருகூவுக்கு பின்னால்தான் என்பதில் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பில் கருத்து வேற்றுமை கிடையாது. பொதுவாக ஓதப்படும் குனூத் ருகூவிற்கு முன்னால்தான் என்பது அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டு அறிவிக்கப்படும் அறிவிப்புகளில் சரியான அறிவிப்பாகும். ஆனால் ஏனைய ஸஹாபாக்களுடைய செயல் வித்தியாசமாக இருக்கிறது. எனவே இரண்டும் ஆகுமான முறைகளாகும்.

சில சஹாபாத் தோழர்கள் ருகூவுக்கு முன்னாலும் வேறு சில ஸஹாபாக்கள் ருகூவுக்குப் பின்னாலும் குனூத் ஓதினார்கள் என அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். (இப்னுல் முன்திர்)

ஆரம்பமாக ருகூவுக்கு முன்னால் குனூத் ஓதுவதை ஏற்படுத்தியவர்கள் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களாகும். அதன் மூலம் மக்கள் ரகஅத்தை அடைந்து கொள்வதை எதிர்பார்த்தார்கள்.

(முஹம்மத் இப்னு நஸீர்) பத்ஹுல் பாரி 1/715

(பைதுல் அப்காரி அத்தவ்லிய்யா) என்ற அச்சதகத்தில் அச்சிடப்பட்ட கிதாபு.

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிப்பதாவது: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு மாதகாலமாக சில கூட்டத்தினருக்கு 'பதுஆ' செய்து குனூத் ஓதியுள்ளார்கள். பின்பு அதனை விட்டு விட்டார்கள். ஆனால் ஸுப்ஹுத் தொழுகைக்குரிய குனூத்தை இவ்வுலகை விட்டும் பிரியும் வரை விடவேயில்லை.

-பைஹகி 2/201, தாகுத்னி 2/39, முஸ்னப் அப்துல் ரஸ்ஸாக் 3/110, (பாகவி) ரஹுஸ் ஸுன்னா 3/124 (நவவி) சரஹுல் முஹத்தப் 3/504 முஸ்னத் அஹ்மத் 3/162, பத்ஹுர் ரப்பானி 3/302 மஜ்மஉல் ஸவாஇத் 2/139.

**களாத் தொழுகை**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

'யாரேனும் ஒரு தொழுகையை மறந்து விட்டால் நினைவு வந்ததும் அவர் அதைத் தொழட்டும்! இதைத் தவிர அதற்கு வேறு பரிகாரம் எதுவுமில்லை' என்னைத் தியானிப்பதற்காகத் தொழுகையை நிலை நிறுத்துவீராக!' என்ற வசனத்தையும் ஓதிக் காட்டினார்கள். - ஸஹீஹுல் புகாரி 597, ஸஹீஹ் முஸ்லீம் 1216, 1217, 1218.

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: நாங்கள் (ஒரு நாள்) இரவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஓய்வெடுத்தோம். சூரியன் உதயமாகும் வரை நாங்கள் (யாரும்) விழிக்கவில்லை. பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (எழுந்து), ஒவ்வொருவரும் தமது வாகனத்தின் தலையைப் பிடித்து (க் கொண்டு இந்த இடத்தை விட்டு நகர்ந்து) செல்லட்டும். ஏனெனில், இந்த இடத்தில் நம்மிடம் ஷைத்தான் வந்து விட்டான்' என்று கூறினார்கள். நாங்கள் அவ்வாறே (பயணம்) செய்தோம். பிறகு (சிறிது தூரம் சென்றதும்) தண்ணீர் கொண்டு வரச் சொல்லி அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். பிறகு இரண்டு ரக்அத்துகள் (சுன்னத்) தொழுதார்கள். பிறகு தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட, வைகறைத் தொழுகை(பஜ்ர்) தொழுவித்தார்கள்.

-ஸஹீஹ் முஸ்லீம் 1212.

ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு போது சூரியன் மறைந்த பின் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறைஷிக் காபிர்களை ஏசிக் கொண்டே வந்து 'அல்லாஹ்வின் தூதரே! சூரியன் மறையும் வரை நான் அஸர் தொழவில்லையே' என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக நானும் அஸர் தொழவில்லை' என்று கூறினார்கள். நாங்கள் 'புத்ஹான்' எனும் பள்ளத்தாக்கை நோக்கிச் சென்றோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அஸர் தொழுகைக்காக உளூ செய்தார்கள். நாங்களும் அதற்காக உளூ செய்தோம். சூரியன் மறைந்த பின் அஸர் தொழுதார்கள். அதன் பின் மஃரிப் தொழுதார்கள். -ஸஹீஹுல் புகாரி 596, 598.

**எவ்வளவு தொலைவு பயணம் செய்யும் போது சுருக்கி, சேர்த்து தொழலாம்?**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு பகல் ஒரு இரவுப் பயணம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு, இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு ஆகியோர் நாற்பத்தெட்டு மைல் தொலைவிற்குப் பயணம் செய்யும் போது கஸ்ருச் செய்பவர்களாகவும் நோன்பை விடுபவர்களாகவும் இருந்தார்கள். -ஸஹீஹுல் புகாரி அத்தியாயம் 18, பாடம் 4

பிரயாணத்தின் தொலை தூரம் 16 பர்ஸக் ஆகும். ஒரு பர்ஸக் என்பது 3 மைல்களாகும். இது தற்காலக் கணக்கின் பிரகாரம் (80 –கி.மீ. 640 மீட்டர்களுமாகும். – அல் பிக்ஹ் அலல் மதாஹிபில் அர்பஆ பாகம் 01, பக்கம் 317.

**பிறை பார்ப்பதில் நபி வழி யாது?**

உம்முல் பள்ல் பின்த் அல்ஹாரிஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (ஒரு வேலை நிமித்தம்) என்னை ஷாம் (சிரியா) நாட்டிலிருந்து முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அனுப்பினார்கள். நான் ஷாம் சென்று அவரது தேவையை நிறைவு செய்தேன். நான் ஷாமில் இருந்த போது ரமழான் (முதல்) பிறை எனக்குத் தென்பட்டது. வெள்ளிக்கிழமை இரவில் நான் பிறையைக் கண்டேன்.

பிறகு அந்த (ரமலான்) மாதத்தின் இறுதியில் நான் மதீனா வந்து சேர்ந்தேன். அப்போது அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (பயணம் குறித்து) என்னிடம் விசாரித்தார்கள். பின்னர் பிறை குறித்தும் பேசினார்கள். அப்போது 'நீங்கள் (ஷாமில்) எப்போது பிறை பார்த்தீர்கள்?' என்று கேட்டார்கள். நான், 'நாங்கள் வெள்ளியன்று பிறை கண்டோம்' என்று பதிலளித்தேன். அவர்கள், 'நீயே அதைக் கண்டாயா?' என்று கேட்டார்கள். நான், 'ஆம்(நானும் கண்டேன்). மக்களும் அதைக் கண்டார்கள். மக்களும் நோன்பு நோற்றனர். முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் நோன்பு நோற்றார்கள்' என்று கூறினேன். அதற்கு அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்'. ஆனால், நாங்கள் சனிக்கிழமை இரவுதான் (முதல்) பிறை கண்டேன். எனவே, நாங்கள் (ரமலான் மாதத்தின்) எண்ணிக்கையை முப்பது நாட்களாக முழுமையாக்கும் வரை, அல்லது (ஷவ்வால் மாதத்தின் முதல்) பிறையைப் பார்க்கும் வரை நோன்பு நோற்றுக் கொண்டேயிருப்பேன்' என்று சொன்னார்கள். அதற்கு நான், முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (முதல் பிறை) கண்டு, நோன்பு நோற்றது உங்களுக்குப் போதாதா?' என்று கேட்டேன். அதற்கு, 'இல்லை. இப்படித்தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார்கள்' என்று பதிலளித்தார்கள்.

-ஸஹீஹ் முஸ்லிம் 1983.

(இந்த ஹதீதிலிருந்து தெரிவதாவது: மதீனாவில் இருந்த அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், மதீனாவுக்கு வடக்கே சுமார் 1500 கி.மீ தொலைவில் இருந்த

ஷாம் (சிரியா) நாட்டில் பார்த்த பிறையை ஏற்று, மதீனாவில் செயல்படுத்த மறுத்து விட்டார்கள். ஷாமில் வெள்ளிக்கிழமை ரமலானின் முதல் பிறை பார்த்துள்ளார்கள். மதீனாவில் மறுநாள் சனிக்கிழமைதான் பிறை தெரிந்திருக்கிறது. ஷாம்வாசிகள் பார்த்த பிறையை ஏற்று, ஒரு நாள் முன்பாக மதீனாவில் நோன்பை முடித்துக் கொள்ள நபித்தோழர் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மறுத்ததுடன், தமது கருத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆணையின் பேரில் அமைந்ததாகும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இதிலிருந்து அந்தந்தப் பகுதியில் பிறை பார்த்தே நோன்பு நோற்க வேண்டும். அந்தந்தப் பகுதியில் பிறை பார்த்தே நோன்பை விட வேண்டும். ஒரு பகுதியில் பிறை தெரிவது, தொலைவில் உள்ள பகுதியினரைக் கட்டுப்படுத்தாது என்று அறிய முடிகிறது)

அபுல் பக்தரீ சயீத் பின் ஃபைரூஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாவது:

நாங்கள் உம்ராவிற்காக (மக்காவிற்கு)ப் புறப்பட்டுச் சென்றோம். (வழியில்) நாங்கள் 'பத்னு நக்லா' என்னுமிடத்தில் தங்கியிருந்தபோது, பிறையைப் பார்க்க ஒன்று கூடினோம். அப்போது மக்களில் சிலர், 'அது மூன்றாவது பிறை' என்று கூறினர். வேறு சிலர், '(அல்ல) அது இரண்டாவது பிறை' என்று கூறினர். பின்னர் நாங்கள் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைச் சந்தித்த போது, 'நாங்கள் பிறை பார்த்தோம். மக்களில் சிலர், 'அது மூன்றாவது பிறை' என்றனர். வேறு சிலர் 'அது இரண்டாவது பிறை' என்று கூறினர்' என்று சொன்னோம். அதற்கு இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், எந்த இரவில் நீங்கள் பி;றை கண்டீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு, 'இன்ன (மாதத்தின்) இன்ன இரவில்' என்று பதிலளித்தோம். அப்போது, பார்ப்பதற்காகவே பிறையை அல்லாஹ் சிறிது நேரம் தென்படச் செய்கிறான். ஆகவே, அது நீங்கள் கண்ட இரவுக்குரியதே ஆகும்' என்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என்றார்கள். -ஸஹீஹ் முஸ்லீம் 1984.

**இஸ்லாத்தின் பார்வையில் கனவு**

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

நல்ல (உண்மையான) கனவு நபித்துவத்தின் நாற்பத்தாறு (46) பாகங்களில் ஒன்றாகும்.

-ஸஹீஹுல் புகாரி 6989, 6988, 6987

ஸஹீஹ் முஸ்லீம் 4556, 4557.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: நல்ல (உண்மையான) கனவு அல்லாஹ்விடமிருந்து வருவதாகும். கெட்ட (பொய்யான) கனவு ஷைத்தானிடமிருந்து வருவதாகும் என அபூ கத்தாதா அல் அன்சாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்தார்கள்.

- ஸஹீஹுல் புகாரி 6984

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

கனவில் என்னை யார் காண்கிறாரோ அவர் விழிப்பிலும் என்னைக் காண்பார். அல்லது விழிப்பில் என்னைக் கண்டவரைப் போன்றவர் ஆவார். (ஏனெனில்) ஷைத்தான் என் உருவத்தில் காட்சியளிக்க மாட்டான்.'

-ஸஹீஹுல் புகாரி 6993, ஸஹீஹ் முஸ்லீம் 4560

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

(கனவில்) யார் என்னைக் கண்டாரோ நிச்சயமாக அவர் நிஜத்தையே கண்டார். ஏனெனில், ஷைத்தான் என் உருவத்தில் (காட்சியளிப்பவனாக) இருக்க மாட்டான்.

-ஸஹீஹுல் புகாரி 6997 ஸஹீஹ் முஸ்லீம் 4559

**ஸஹீஹான ஹதீதை மட்டுமே பின்பற்றுவோம் என வாதிடுபவர்களிடம் ஒரு கேள்வி?**

தொழுகையில் தக்பீர் கட்டுவது எப்படி எங்கே? என்பதற்கான எந்த ஒரு ஹதீதும் ஸஹீஹானதாக இல்லை. ழயீஃபானதாக (பலஹீனமான) ஹதீஸை ஏற்று அமல் இபாதத் செய்ய முடியாது என மறுப்பவர்கள் தொழுகையில் எங்கே எப்படி தக்பீர் கட்டுவார்கள்? ஸஹீஹான ஹதீது இல்லை என்பதால் தானாகவே ஒரு வழிமுறையை ஏற்படுத்திக் கொள்ள முடியுமா?

தொழுகையில் நெஞ்சுக்குக் கீழே தொப்புளுக்கு மேல் கைகளை வைப்பதா? அல்லது தொப்புளுக்கு கீழ் வைப்பதா? அல்லது நெஞ்சின் மீது வைப்பதா என்பது தொடர்பாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து (ஸஹீஹான) எந்த ஹதீதும் அறிவிக்கப்படவில்லை.

நபித்தோழர் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தொப்புளுக்கு மேலே கைவைத்துத் தொழுதார்கள் அபூதாவூதில் (753) ஆனால், இதன் அறிவிப்பாளரான ஜரீர் அள்ளப்பீ, அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து அறிவிப்பதை ஏற்க இயலாது என மீஸானுல் இஃதிதாவில் கூறப்பட்டுள்ளது. அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறித்து இதைப்போன்று அறிவிக்கப்பட்டுள்ள தகவலும் வலுவானதல்ல என அபூதாவூத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவ்வாறே அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ள ஒரு ஹதீது இவ்வாறு கூறுகிறது.

தொழுகையில் தொப்புளுக்குக் கீழே ஒரு கை மீது மற்றொரு கையை வைப்பது நபி வழியாகும். (அபூதாவூத் 751) ஆனால், இதன் அறிவிப்பாளர் தொடர்கள் அனைத்திலும் அப்துர் ரஹ்மான் பின் இஸ்ஹாக் அல்வாசிதீ என்பார் இடம் பெற்றுள்ளார். இவர் பலவீனமானவர். ஏற்கப்படாதவர் என்று ஹதீது கலை வல்லுனர்கள் இனம் கண்டுள்ளனர். அபூஹுரைரா

ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறித்து ஒரு தகவலும் இவ்வாறு அபூதாவூதில் (754)ல் காணப்படுகிறது. இதன் அறிவிப்பாளர் தொடரிலும் மேற்சொன்ன அப்துர் ரஹ்மான் பின் இஸ்ஹாக் இடம் பெற்றுள்ளார்.

அடுத்து நபித்தோழர் வாயில் பின் ஹுஜ்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ள ஒரு ஹதீது:

நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுதேன். அவர்கள் (தொழுகையில்) வலக் கரத்தை இடக் கரத்தில் வைத்து நெஞ்சின் மீது வைத்தார்கள். இப்னு குஸைமா (479). ஆனால் இந்த ஹதீதின் அறிவிப்பாளர்களில் ஒருவரான முஅம்மல் பின் இஸ்மாயீல் நினைவாற்றல் குறைந்தவர் என்பதால் இது பலவீனமான அறிவிப்பாளர் தொடராகும் என்று சொல்லப்படுகிறது. மற்றொரு ஹதீது காணப்படுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (தொழுகையில்) தமது நெஞ்சின் மீது கைகளை வைத்திருந்ததை நான் பார்த்தேன் என்று ஹுலப் அத்தாயீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். – முஸ்னது அஹ்மது (22025)

இந்த ஹதீது அறிவிப்பாளர் தொடர் வலுவானது என்று கூறப்பட்டாலும், இதன் அறிவிப்பாளர் தொடரில் இடம் பெற்றுள்ள சிமாக் பின் ஹர்ப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் விமர்சனத்திற்குள்ளானவர் ஆவார். அன்னார் பலவீனமானவர் என்று சுஃப்யான் ரஹ்மத்துல்லாஹி அவர்களும், ஹதீதில் குழப்பத்திற்குரியவர் என்று அஹ்மத் ரஹ்மத்துல்லாஹி அவர்களும் அவரதுஅறிவிப்பு மட்டும் ஓர் அடிப்படைக்கு ஆதாராமாகாது என்று நஸயீ ரஹ்மத்துல்லாஹி அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

(அல்மின்ஹாஜ், அவ்னுல் மஅபத், பத்லுல் மஜ்ஹூத், மீஸானுல் இஃதிதால்)

**உயரமாகவிருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்று ஷரீப்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்று ஒட்டகத்தின் திமில் போல உயரமாக இருந்ததை தாம் பார்த்ததாக ஸுப்யான் அத்தம்மார் அறிவிக்கிறார்கள்... - ஸஹீஹுல் புகாரி 1390.

*முடிந்தது.*